ந. 22

சிற வி

கு. வே. சம்பந்த செட்டியார்

உ

O-,2MSC,5
N12
118131

522

# SAVITRI

## A NEW TAMIL DRAMA

522
1-1912

BY

G. V. SAMBANDA CHETTY.

522
1-12

First Edition.

Madras:
PRINTED BY S. MURTHY & CO.,
THE "KAPALEE" PRESS,
305, THAMBU CHETTY STREET, MADRAS.

1912.

Copy Right Registered.] [Price As. 8.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
டிசம்பர்
மாதம் வருடம் 83

செப்பனிட்டு முடித்த
டிசம்பர்
மாதம் வருடம் 83

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

# ஸாவித்ரி

## இத்தமிழ் நாடகம்

கு. வே. சம்பந்த செட்டியாரால்
இயற்றப்பெற்றது.

முதற்பதிப்பு.

சென்னை
எஸ். மூர்த்தி அண்டு கம்பெனியாரால்
கபாலி அச்சுயந்திர சாலையில்
அச்சிடப்பட்டது

1912

காபிரைட் செய்யப்பட்டது.] [விலை அ 8

O-,2MSC,S
N12

522
1-1912

522
1-1912

Savitri

இந்நூலை
என்னருமை தாயார்
கு. சின்னம்மாள்
ஞாபகார்த்தமாக வெளியிடுகின்றேன்
கு. வே. ச.

# முகவுரை

செந்தமிழ்ச் செல்வர்காள்! அடியேன் அநேக நாடகங்களைப் படித்திருக்கும் பழக்கத்தினாலும் நடத்தப் பார்த்திருப்பதினாலும் எனதருமை நண்பர்களில் சிலர் வேண்டுகோளுக்கிணங்கி என் சிற்றறிவுக் கெட்டியவாறு, "கற்புடை மாதரெல்லாங் கணவனே தெய்வமென்பார்" என்றும் "கற்புடைச்சிந்தை மாதர் கணவனை யன்றி வேறோர் இற்புறத்தவரை நாடார்" என்றும் ஆன்றோர் கூறியபடித் தன் நாயகனையே தெய்வமெனக்கொண்டு வழிபடும் பெருந்தகைமையினை வாய்ந்த கற்புக்கரசிகள் கொண்டாடும் கவினுற்றோங்கும் ஸாவித்ரியின் திவ்யசரித்திரத்தை நாடகரூபமாக ஒருவாறு எழுதத்துணிந்தனன். இந்நாடகத்தை வாசிக்கும் சகோதர சகோதிரிகள் இம்மை மறுமைப்பயனை யெளிதினிலடையும்படி, "மருவியகாதன் மனையாளுந்தானு மிருவரும் பூண்டொப்பினல்லால் ஒருவரால் இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம் செல்லாது தெற்றிற்று நின்று," என்ற சான்றோர் முதுமொழிக்கிணங்க இந்நாடகத்தலைவன் தலைவிகளாகிய சத்தியவந்தனையும் ஸாவித்ரியையும் போல் நடந்துகொள்ள வேண்டுமென்பதே எனது முக்கியகொள்கையாம். இதனை யெழுதும்போதும் அச்சுவாகனமேற்றும்போதும் எனக்கு உதவிபுரிந்த மதராஸ் பியர் ஆபீஸ் பென்ஷன் டிராபிக் ஓவர்சியரும், மதுரைத் தமிழ்சங்கத்து வித்துவானும், ஆயுர்வேத பண்டிதருமாகிய ஸ்ரீமான் மோசூர்-முனிசாமி முதலியாரவர்களுக்கும், இதனை யெழுதும்படி தூண்டிய அன்பர் முதலியோர்களுக்கும் நன்றிப் பாராட்டுந் தக்கவனாயிருப்பதுமன்றி அவர்களுக்கும் வந்தனமுஞ் செலுத்துகிறேன். இந்நாடகம் எழுதினது எனது முதன் முயற்சியானதாலும் அவசரத்தில் அச்சிடப்பெற்றதாலும் சில குற்றங்களிருந்தபோதிலும் அரிய பெரிய நூல்களிற் பயின்ற கல்விமான்கள் அவற்றைக் குறியாது ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்

கு. வே. சம்பந்த செட்டி

9
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 1912
522
MADRAS

# ஸாவித்ரி

## நாடக பாத்திரங்கள்

522
1-17

| | |
|---|---|
| துயுமத்சேனன் ... | ... சாலவபுரி அரசன் |
| சத்தியவந்தன். ... | ... துயுமத்சேனன் புதல்வன் [நாடகத் தலைவன்] |
| சுமாலி ... | ... துயுமத்சேனன் அரண்மனை விதூஷகன் [சத்தியவந்தன் தோழன்] |
| அசுவபதி ... | ... மத்ராபுரி அரசன் |
| கடகேது ... | ... துயுமத்சேனன் எதிரி |
| இயமதருமராஜன் ... | ... தென்திசைக்காவலன் |
| நாரதர் ... | ... சப்தமுனிகளில் ஒருவர் |
| சித்தராபுத்திரன் ... | ... இயமதர்மராஜன் கணக்கன் |
| பத்மாட்சி ... | ... துயுமத்சேனன் மனைவி |
| மாலவி ... | ... அசுவபதி மனைவி |
| ஸாவித்ரி ... | ... அசுவபதி புதல்வி [நாடகத்தலைவி] |
| ஜயமாலா ... | ... இயமதருமராஜன் மனைவி |

மந்திரி, சேனத்தலைவன், வீரர்கள், தோழிகள், தவமுனி, எமதூதர்கள் முதலியோர்.

1965
894.8112

நாடக நிகழிடம்:—சாலவபுரியிலும், சாலவபுரியையடுத்த காட்டிலும், மத்ராபுரியிலும், இயமலோகத்திலுமாம்.

# ஸாவித்ரி

## அங்கம். I.

### காட்சி. 1.

இடம்.—சாலவபுரி த்யுமத்சேன மகாராஜன் கொலுமண்டபம்.

அரசன் மந்திரி முதலாயினோர்.

து. மந்திரி! நம் தேசத்தைத் துரஹங்காரமாகக் கைப்பற்ற கடகேதுமகாராஜன் படையெடுத்து வந்திருக்கிறானென்று சேனைத்தலைவர் மூலமாக அறிந்திருக்கிறேன். இதற்குச் செய்யவேண்டிய முயற்சியைப் பற்றித் தெரிவிப்பாயாக.

மந்திரி. நாமேன் பயப்படவேண்டும். வந்த சண்டாளனைப் போர்புரிந்து ரணகளத்தில் தோற்கடித்துவிடலாம். மிக்க பலவந்தரான சேனாதிபதியிருக்க நமக்கு என்ன பயம். இப்போதே சேனைத் தலைவரை வரவழைத்து கடகேதுவை எதிர்த்து ஜெயித்து வரும்படிக் கட்டளையிட தங்களுடைய உத்திரவுக்கு எதிர்பார்த்திருக்கிறேன்.

து. படையெடுத்து வந்த கடகேதுவோ மிக்க பலவந்தன். நாமோ பலஹீனர். நம் சேனாதிபதியோ பலவந்தர்தான். அதற்குச் சந்தேகமில்லை. கடகேது நம் சேனாதிபதியைப் பார்க்கிலும் பலவந்தனென்று நான் எண்ணுகிறேன். ஆகையால் சேனாதிபதியுடன் உதவியாகப் போர் புரிகிறதற்கு என்னுடைய புத்திரன் சத்தியவந்தனை அனுப்புவேன். நம் கெட்ட காலத்துக்குத் தக்கபடி, அவன் மணிபுரத்துக்குத் தன் மாமன் வீட்டுக்குப் போயிருக்கிறான்.

மந். அவனை இப்பொழுதே ஓர் ஆளை அனுப்பி வரவழைத்தல் நலமென்று தோன்றுகிறது.

து. அவனை இப்பொழுது எப்படி வரவழைப்பது? எதிரிகளுடைய சேனைகளோ நம்மூர் சுற்றிலும் இருக்கின்றன. எவ்

விடத்தும் சேனைகள் மயமாகவே யிருக்கின்றன. இச்சமயத்தில் சத்தியவந்தன் ஊருக்குள் எப்படி பிரவேசிப்பான் என்று நான் எனக்குச் சந்தேகம். ஒன்றும் தோன்றவில்லையே!

மந். நாம் ஆலோசனையில் வீண்காலம் போக்குவதினால் வந்திருக்கப்பட்ட சேனைகள் ஊருக்குள் அக்கிரமமாகப் பிரவேசித்து விட்டால் என்ன செய்கிறது. சேனைத்தலைவரைக் கூப்பிடுகிறதற்காக ஆக்ஞாபிக்கிறேன்.

து. மந்திரி! அப்படியே செய்.

மந். சேவகா!

சே. பிரபோ!

மந். சேவகா! இப்போதே போய் நம் சேனைத்தலைவரை மகாராஜா வரச்சொன்னாரென்று கூறி அழைத்துவா.

[சேவகன் போகிறான்.]

து. மந்திரி சத்தியவந்தனை எப்படி வரவழைப்பாய்?

மந். மகாராஜா! சுமாலியை அனுப்பினால் பகைவருக்குத் தெரியாமல் அவன் தந்திரமாக மணிபுரத்துக்குப் பிரயாணமாகிப் போய் இளவரசைக் கூட்டிக்கொண்டு வருவான் என்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது.

து. சுமாலியை இப்போதே அழைப்பி.

மந். சேவகா!

சே. பிரபோ!

மந். சேவகா! நீ ஓடிப்போய் சுமாலியை அழைத்துவா.

[சேவகன் போகிறான்.]

மந். சேவகா!

சே. பிரபோ!

து. சேவகா! சேனைத்தலைவர் வருகின்றாரா?

மந். மகாராஜா! நமஸ்கரிக்கின்றேன். சேனைத்தலைவர் வாசலில் வந்து காத்துக்கொண்டிருக்கிறார். தங்களுடைய பேட்டிக்கு எதிர்பார்க்கிறார்.

து. வரச்சொல். [சேவகன் போகிறான்.]



சேனைத்தலைவர் வருகிறார்.

சே. த. மகாராஜா! நமஸ்காரம்.

து. சேனைத்தலைவரே! நான் இப்போது உன்னை வரவழைத்ததற்குக் காரணம் தெரியுமா?

சே. த. தெரியும், உத்திரவுக்கு எதிர்பார்க்கிறேன்.

து. உடனே சேனைகளை அணிவகுத்து எதிர்த்துவந்த கட்கேதுவை ஜெயித்துவரக் கடவாய்.

சே. த. கட்டளைப்பிரகாரம் நடந்துகொள்கிறேன். எதிரியினுடைய சேனைகள் நம்மூரை அல்லோலகல்லோலப்படுத்தி நம்மரண்மனையைச் சுற்றி முற்றுகைபோட்டிருக்கின்றன. ஆகையால் நாம் ஜெயிப்போமென்று எனக்குத் தோற்றவில்லை. என்னால் கூடியமட்டும் பிரயாசைப்பட்டுப் பார்க்கிறேன்.

[போகிறான்.]

மந். சேவகா!

சே. பிரபோ!

து. சேவகா! சுமாலி வருகிறானா?

சே. மகாராஜா! சுமாலி கூடிய சீக்கிரம் வருகிறேனென்று கூறினார். இதோ மறுபடியும் போய் அழைத்துவருகிறேன்.

து. சுமாலியைச் சீக்கிரம் அழைத்துவா.

சுமாலி வருகிறான்.

மந். மகாராஜா! சுமாலி வந்தான்.

து. சுமாலி! உன்னால் ஒரு காரியமாக வேண்டி யிருக்கிறது தடைசெய்யாமல் எனக்கு முடித்துத்தர வேண்டும்.

சு. தாங்கள் ஏன் அப்படி கூறுகிறீர்? தங்கள் கட்டளைபடி நடக்க காத்திருக்கிறேன்.

து. வேறு ஒன்றுமில்லை. சத்தியவந்தன் மணிபுரத்துக்கு மாமன் வீட்டுக்குப் போயிருக்கிறான் அவனை அழைத்துவர வேண்டும்.

சு. அப்பப்பா! அந்த வேலை என்றால் தற்காலத்தில் செய்ய முடியாது. எங்கே பார்த்தாலும் எதிரியினுடைய சேனை

களாகவே யிருக்கின்றன. நான் இப்போது இங்கே வரப் பட்டபாடு வெகுகஷ்டமாயிருந்தது. என்றால் அந்த வேலை முடியவே முடியாது.

து. உனக்கென்னபயம். நீதான் தகுந்தவன். உடனே புறப்படு.

சு. எங்கே?

து. மணிபுரத்துக்கு.

சு. எதற்கு?

து. சத்தியவந்தனை அழைத்துக்கொண்டு வருகிறதற்கு.

சு. மணிபுரத்துக்கு என்னத்திற்குப் போனான்?

து. மாமனைப் பார்க்கப் போனான்.

சு. ஓகோ! அவன் போனகாரியம் எனக்குத் தெரியும். அவன் மாமன்மாமிமார்களைப் பார்க்கப் போனவனல்ல. அவர்களுக்கு ஒரு பெண் இருக்கிறது. அதைப் பார்க்கப்போயிருப்பான்.

து. எப்போது பார்த்தாலும் உனக்குக் குறும்பும், விளையாட்டுமே! விளையாடாதே!

சு. இல்லை. இல்லை. அவன் எதற்குப் போயிருக்கிறான் என்று கூறினேன்.

து. நீ உடனே புறப்படு.

சு. புறப்படுகிறேன். என்ன செய்யச் சொல்லுகிறீர்?

து. சத்தியவந்தனை நான் உடனே அழைத்துவரக் கூறினதாகச் சொல்லி அழைத்து வரவேண்டும். மற்றொன்றும் கூறாதே. அவன் அதைரியப்படுவான். ஜாக்கிரதை.

சு. உத்திரவு.

[போகிறான்.]

சே. (ஓடிவந்து) மகாராஜா! எதிரிகளுடையவீரர்கள் அரண்மனையுட்பிரவேசிக்கிறார்கள்.

கடகேதுவும் அவனுடைய வீரர்களும் வருகிறார்கள்.

கட. வீரர்களே! சிம்மாசனத்தி லிருக்கும் த்யுமத்சேனனை இழுத்துக்கொண்டு வாருங்கள். மந்திரி முதலானவர்களைப் பிடித்துக் காராகிருகத்துள் அடையுங்கள்.



15

வீரர். பிடியுங்கள்.
அடியுங்கள்.
உதையுங்கள்.
இழுங்கள்.

கட. த்யுமத்சேனனை இங்கு கொண்டு வாருங்கள்.

வீரர். இதோ! கை கால்களைக் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறோம்.

கட. வீரர்களே! அந்தப்புரத்துக்குப் போய் இராணி பத்மாட்சியை இழுத்துக்கொண்டு வாருங்கள்.

[போகிறார்கள்.]

[மூர்ச்சிக்கிறான்]

து. ஜகதீசா! ஜகதீசா!

வீரர்கள் பத்மாட்சியுடன் வருகிறார்கள்.

வீரர் இதோ! இராணியைக்கட்டி இழுத்துக்கொண்டு வந்தோம்.

கட. த்யுமத்சேனன் அணிந்திருக்கும் கிரீடத்தையும், அவனும் இராணியும் போட்டிருக்கும் ஆடைஆபரணங்களையும் கழற்றிக்கொண்டு, கண்களைக்குத்தி, காட்டில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்.

வீரர். அப்படியே செய்கிறோம். உத்திரவுக்குக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

[கடகேது போகிறான்.]

காட்சி முடிகிறது.

# அங்கம். I.

## காட்சி 2.

இடம்.—மத்ராபுரியில் நந்தவனம்.

ஸாவித்ரியும், தோழியும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

ஸா. நந்தவனம் எவ்வளவு இரமணீயமாயிருக்கிறது.

தோழி. ஆஹா! ஆஹா! மா, பலா, கமுகு, தெங்கு முதலிய விருக்ஷங்கள் எவ்வளவு செழித்தோங்கி நிழலைத்தருகின்றன.

ஸா. ஸகி! இச்சம்பங்கியின் வாசனை எவ்வளவு மனோகரமாயிருக்கிறது.

தோ. தேவி! இதோ பார்த்தாயா! மல்லிகைக்கொடி முல்லைக்கொடியோடு எப்படிபடர்ந்திருக்கிறது.

ஸா. ஸகி! ரோஜாப்பூ எப்படி மலர்ந்திருக்கிறது.

தோ. தேவி! இந்நீலோத்பலம் எவ்வளவு அழகாயிருக்கிறது.

ஸா. ஸகி! அம்மயில்கள் எவ்வளவு உல்லாசமாய்க் காலங் கழிக்கின்றன.

தோ. தேவி! குயில்கள் எவ்வளவு இனிமையாகப் பாடுகின்றன.

ஸா. ஸகி! மான்கள் எப்படி குதித்து விளையாடுகின்றன.

தோ. தேவி! வசந்தகாலமானதால் இவ்வுன்னதமான நந்தவனத்தில் தென்றற்காற்று எவ்வளவு மந்தமாருதமாக வீசுகிறது.

ஸா. ஸகி! சந்திரன் எவ்வளவு இரமணீயமாய் தன்னுடைய கிரணங்களைப் பரவச் செய்கிறான்.

தோ. தேவி! நாம் ஜலக்கிரீடை யாடிவிட்டு போகலாமா?

ஸா. யாரோ பாடுகிறார்போல் கேட்கிறதே.

தோ. ஆம். அதோ யாரோ இரண்டு யௌவன புருஷர்கள் வருகிறார்கள்போல் தோன்றுகிறது.

ஸா. அவர்களுடைய பாடல்கள் எவ்வளவு இனிமையாயிருக்கின்றன. வந்த இருவருள் அவர் யாராயிருக்கலாம். சற்று



இங்கிருந்து அவர்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்களோ கேட்டு போகலாம்.

தோ. தேவி! நாம் யிவ்விடத்திலிருப்பது தகுதியல்ல போவோம் வா.

ஸா. ஸகி! எனக்கு இவ்விடத்தை விட்டுவர முடியவில்லை.

தோ. தேவி! நான்சொல்வதை கேள். உனக்கோ யௌவனப்பருவம் வந்துவிட்டது. நீயோ விவாகமாகாத கன்னிகை. அன்னியபுருஷர் எதிரில் வரக்கூடாதவள். மகாராஜா பார்த்தால் கோபித்துக்கொள்வார்கள். நாம் போகலாம் வா.

ஸா. ஸகி! வந்த இருவருள் அதோ பார்த்தாயா அந்த புருஷர் எவ்வளவு அழகாயிருக்கிறார்.

தோ. தேவி! அவர்கள் யாரோ தெரியவில்லை. நம்மருகில் வருகிறார்கள். நாம் இங்கு நிற்பது தகுதியல்ல. நாம் இங்கு வந்து நேரமாய்விட்டது. அரண்மனையில் நம்மை தேடுவார்கள். சீக்கிரம் போவோம் வா.

ஸா. ஸகி! வசந்தகாலமானதால் நீ கூறினபடி நாம் ஜலக்கிரீடையாடிவிட்டு போகலாம்.

தோ. தேவி! அப்படியே செய்யலாம். அதற்கு என்ன தடை.

ஸா. ஸகி! ஆனால் நாம் போகலாம். நீ அரண்மனைக்குப்போய் என்னுடைய வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு சீக்கிரமாய் வா.

தோ. தேவி! உன்னைத் தனிமையாக விட்டுப்போகிறது எனக்குப் பிரியப்படவில்லை.

ஸா. எனக்கு என்ன பயம். ஸகி! நான் குளக்கரையிலிருக்கிறேன். நீ சீக்கிரம் வந்துவிடு. [போகிறார்கள்.]

ஸத்தியவந்தனும் சுமாலியும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

ஸத். நம்முடைய குதிரைகள் அதிக தூரத்திலிருந்து வந்தபடியால் நாம் கொஞ்சம் இளைப்பாறி விட்டு, நம்முடைய குதிரைகளுக்கும் இளைப்பாறப் போகலாம்.

சு. அப்படியே செய்யலாம். நமக்குக் கஷ்டம் அதிகமா? குதிரைகளுக்கு அதிகமா?

சத். குதிரைகளுக்குத்தான் கஷ்டம் அதிகம். எவ்வளவு தூரத்திலிருந்து நம்மைச் சுமந்துகொண்டு வருகின்றன?

சு. இல்லை, இல்லை, பிரியா! நமக்குத்தான் கஷ்டம் அதிகம். நாம் குதிரைமேல் ஏறிவருவது எவ்வளவு கஷ்டம்?

சத். உனக்கு ஏறிவருவது கஷ்டமாயிருக்கலாம்.

சு. என் கஷ்டம் சுவாமிக்குத்தான் தெரியும். உனக்கு என்ன! மாமன் வீட்டிலிருந்த சுகத்தினால் உனக்கு எந்த கஷ்டமும் தெரியவில்லை.

சத். சுமாலி! விளையாடாதே! சீக்கிரம் நம்முடைய ஊர் போய்ச் சேரவேண்டியிருக்கிறது. என்னுடைய குதிரையோ களைத்திருக்கிறது. ஜலம் எடுத்துக்கொண்டுவருவாய்.

சு. அப்பப்பா! அது என்னால் இப்போது முடியாது. எனக்குத் தாகம் அதிகமாயிருக்கிறது.

சத். நீ இளைப்பாறி விட்டு என் குதிரைமேல் ஏறிக்கொண்டு வரலாம். நான் சீக்கிரம் ஊருக்குப்போக வேண்டியதினால் உன்னுடைய குதிரையைக் கொண்டுபோகிறேன்.

சு. இது தானோ உன்னுடைய நட்பு? நான் அவ்வளவு பசி வாதனையாலும், தாக சாந்தியில்லாமலும் உன்னுடன் வந்ததற்குப் பலன். எனக்கு அதிக தாகமாயிருக்கிறது.

சத். நான்போய் ஜலம் எடுத்துக்கொண்டு வருகிறேன்.

சு. இல்லை, இல்லை. நானேபோய் தண்ணீர் குடித்து உன்னுடைய குதிரைக்கும் ஜலம் எடுத்துக்கொண்டு வருகிறேன். [போகிறான்]

சத். இந்தவனம் எவ்வளவு அழகாயிருக்கிறது. இது யாருடையதோ? தெரியவில்லையே? இங்கிருக்கும் இலை, செடி, கொடி, பூக்கள், எவ்வளவு அழகாயிருக்கிறது. இவ்விடத்தில் கொஞ்சகாலம் இருந்துவிட்டுப் போகலாமென்று என் எண்ணம். ஆனால் என் தகப்பனாரோ, வையுடன் வந்து



காரண நிமித்தமாகவோ அழைத்துவரச் சொல்லி சுமாலியை அனுப்பியிருக்கிறார். சுமாலியைக் கேட்டால் ஒரு சங்கதியும் தெரியப்படுத்தாமல், தகப்பனார் சீக்கிரம் அழைத்து வரச்சொன்னதாகமட்டும் கூறுகிறான். எதுவாயிருக்கலாம்? எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே! நான் ஊரைவிட்டு வந்து கொஞ்ச நாட்கள் கூட ஆகவில்லையே! இப்படியிருக்க திடீர் பிரவேசமாய் அழைத்துவரச் சொன்னதற்குக் காரணம் யாதோ? சீக்கிரம் போகலாம் என்றால் ஜலத்துக்குப் போன சுமாலியும் இன்னும் வரவில்லையே!

ஸா. ஐயையோ! ஐயையோ!

சத். யாருடைய குரலாயிருக்கலாம்.

ஸா. ஜகதீசா! ஜகதீசா!

சத். பெண் குரலாயிருக்கிறதே! என்ன ஆபத்து வந்ததோ!

ஸா. ஐயையோ! ஐயையோ! புலி! புலி!

சத். புலியா! புலியா!

[ஸாவித்ரியைத் தூக்கிக்கொண்டு போன புலியை சத்தியவந்தன் பின்தொடர்ந்து ஓடுகிறான்.]

சத். நான் புலியைக்கொன்றது மிக விந்தையாயிருக்கின்றது. என் கையில் ஒரு ஆயுதமுமில்லை. நான் அப்புலியை எப்படிக் கொன்றேனோ தெரியவில்லையே. நான் தற்காலத்தில் இங்கிராவிட்டால் அந்தப் பெரும்புலி அம்மாதைக் கொன்று விட்டிருக்குமே. அம்மாது யாரோ? இந்தவனம் யாருடையதோ? தெரியவில்லையே. எனக்கு இளைப்பாக விருக்கிறது. சுமாலி எங்கே போயிருக்கிறானோ? அவன் என்னை எங்கே தேடுகிறானோ? [மூர்ச்சிக்கிறான்.]

ஸா. (தனக்குள்) இச்சுந்தர புருஷன் யாரோ தெரியவில்லையே! இவர் இத்தருணத்தில் இவ்விடத்தில் இருந்திராவிடில் நான் எமலோகம் போயிருக்க வேண்டியது நிச்சயம். புலிவேட்டையாடினதால் களைத்திருக்கிறார்போல் தோன்றுகிறது. எதற்கும் இவரை எழுப்பி இவருடைய விருத்தாந்தத்தை அறிந்துகொள்கிறேன். (சத்தியவந்தன் அருகில் சென்று) இராஜகுமாரா! இராஜகுமாரா!

சத். மாதே! நீ யார்? என்னை ஏன் எழுப்பினாய்?

ஸா. ஐயா. நான் இம் மத்ராபுரியை யாளும் அசுவபதி மகாராஜனுடைய ஏகபுத்ரி. நான் இப்பூந்தோட்டத்தில் என் தாதிமார்களுடன் உலாவிக்கொண்டிருக்க ஒரு புலி என்னைத் துரத்திக்கொண்டுவர, தோழி அதைக்கண்டு அரண்மனைக்குவோட, அத்தருணத்தில் என்னைக்காப்பாற்றிய தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். தங்களுக்கு அந்த துஷ்ட மிருகம் ஏதேனுந் தீங்குசெய்ததோ?

சத். மாதே! எனக்கு ஒன்றும் தீங்கு செய்யவில்லை. நான் அதைக்கொன்றுவிட்டேன். நீ இலக்ஷ்மியோ! இந்திராணியோ! வனதேவதையோ! என்று மயங்கி யிருந்தேன். நீ கூறினதினால் அஸ்வபதி மகாராஜனுடைய குமாரி என்று அறிந்தேன். உனக்கு விவாகமாகி யிருக்கிறதா?

ஸா. உம், உம்.

சத். மாதே! ஏன் பதில் கூறாமல் மயங்குகிறாய்? லஜ்ஜை படுகிறாயோ? என்ன யோசிக்கிறாய்? பயப்படாமல் உண்மையைக் கூறு.

ஸா. ஐயா! நான் விவாகமாகாத கன்னிகை. நான் சாலவபுரி த்யுமத்சேனமகாராஜனுடைய புத்திரர் சத்தியவந்தர்மேல் காதல்கொண்டிருக்கிறேன். தங்களைப் பார்த்தபிறகு அக்காதலுக்கு எங்கே பங்கம் வருகிறதோ வென்று யோசிக்கிறேன். தவிர என்னுடைய பதிவிரதாதர்மத்துக்கு எங்கே குறை ஏற்படுகிறதோ வென்று நாணப்படுகிறேன். தாங்கள் யாரோ? எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

சத். மாதே! உன்னுடைய பதிவிரதாதர்மத்துக்கு ஒன்றுங் குறைவாராது. நான்தான் நீ காதல்கொண்ட சத்தியவந்தன். என் தகப்பனார்தான் த்யுமத்சேனமகாராஜா.

ஸா. ஆ! ஆ! அப்படியா! நீர்தானா அச்சத்தியவந்தர்? பிராணநாதா! தாங்கள் எங்கள் அரண்மனைக்குவந்து இரண்டொரு தினம் எங்களுடன் இருந்துதான் ஊருக்குப்போகவேண்டும்.



சத். கண்ணே! நான் மணிபுரத்துக்கு மாமன் வீட்டுக்குப்போயிருக்கும்போது என்தகப்பனார் ஏது காரணார்த்தமாகவோ என்து பிரியன் சுமாலியை அனுப்பி சீக்கிரம் அழைத்துவரும்படியாகக் கட்டளையிட்டிருக்கிறார். அக்காரணம் எனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. நான் சீக்கிரம் ஊர் போய்ச்சேரவேண்டியவனா யிருக்கிறேன். உன்கோரிக்கைப் பிரகாரம் தற்காலம் அரண்மனைக்கு வர அசந்தர்ப்பமாயிருக்கிறது. மன்னிக்கவும். கண்ணே!

ஸா. பிராணநாதா! தாங்கள் ஏன் என்னுடைய மன்னிப்பைக் கேட்கவேண்டும். தங்கள் அபிப்ராயம்போல் நடக்கலாம். எனக்கு ஒரு வரம் மட்டும் தரவேண்டும். பிராணநாதா!

சத். கண்ணே! அது என்ன?

ஸா. பிராணநாதா! நான் சொல்வதைத் தாங்கள் கவனமாய்க் கேட்கவேண்டும். நான் தங்களைத்தவிர வேறொரு புருஷனையுங் கண்ணெடுத்துப் பாரேன். என்னைத் தங்களுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டேன். என் பதிவிரதாதர்மத்துக்குப் பங்கம் வாராமல் காக்க வேண்டியது தங்களுடைய கடமை. நான் மணந்தால் தங்களை மணப்பேன். இல்லாவிட்டால் இறப்பேன். இறந்தாலும் மறு ஜன்மத்தில் உங்களையே மணப்பேன். இது சத்தியம்.

சத். உன்னிஷ்டம்போல் நடக்க நான் காத்திருக்க நீ ஏன் இப்படி வருந்தப்படவேண்டும். நான் ஊருக்குப்போய் திரும்பி வந்து உன்னையே விவாகம் செய்துகொண்டு, அழைத்துக் போகிறேன். [முத்தமிடுகிறான்]

சுமாலி ஒரு பக்கமாய் பதுங்கி வருகிறான்.

சுமா. இது என்ன ஆச்சரியமா யிருக்கிறது? நம் சத்தியவந்தன் விவாகமே வேண்டியதில்லை என்றவன் ஓர் பெண் மணியோடு பேசிக்கொண்டிருக்கிறான். அப்பெண்மணி யாரோ தெரியவில்லை.

சத். கண்ணே! என்னுடைய நண்பன் வருகிறாப்போலிருக்கிறது. நீ அரண்மனைக்குப்போ, நான் போய் வருகிறேன். [முத்தமிடுகிறான்.]

சு. என்ன! ஆச்சரியமாயிருக்கிறதே! சத்தியவந்தன் மயங்கி விட்டான்போல் தெரிகிறது.

ஸா. போய் வரட்டுமா? [முத்தமிடுகிறாள்.]

சத். நான் சீக்கிரம் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன். கவலைப்படாதே. [முத்தமிடுகிறான்.]

ஸா. போய்வரட்டுமா? சீக்கிரம் வருகிறீரா? [போகிறாள்.]

சத். ஆ! கண்ணே! கண்ணே! இன்னமொரு முத்தம் கொடுத்துப் போகலாகாதா! என்மீது எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாய்! என்னுடையபாக்கியமே பாக்கியம்! அவளுடைய தாய்தந்தையர்க்குத் தெரிந்தால் நமக்குப் பா ணிக்கிரஹணஞ் செய்துக் கொடுப்பார்களோ? எனக்கு அவ்விஷ யத்தில் தான் சந்தேகமாயிருக்கிறது. அவளோ என்னைத் தவிர வேறெவரையும் மணக்கப்போகிறதில்லையென்று கூறி யிருக்கிறாள். அவள் கட்டாயம் அப்படியே நடப்பாள். மண ந்தால் என்னை மணப்பாள். இல்லாவிட்டால் இறப்பாள். ஐயோ! என்ன! அவளை மறந்து விடுவோமென்றாலும் முடிய வில்லையே! அவளை விவாகம்செய்து வாழ்வதைவிட எனக்கு வேறொந்த சுகம் வேண்டும். என் தாய்தந்தையர் என்ன சொன்னாலுங் கேளேன்.

சுமாலி வருகிறான்.

சு. ஓ! சத்தியவந்தா! ஓ! சத்தியவந்தா! ஓ! சத்தியவந்தா! எங்கே யிருக்கிறாய்?

சத். சுமாலி! சுமாலி! நானிங்கே யிருக்கிறேன்.

சு. பிரியா! நீ இந்நேரம் எங்குபோயிருந்தாய்?

சத். நான் புலிவேட்டை யாடிவிட்டு வந்தேன்.

சு. புலிவேட்டை யாடிவிட்டா வந்தாய்?

சத். ஆம்.

சு. (தனக்குள்) நான் இங்கேயிருந்து அவர்கள் பேசினதைக் கேட்டுக்கொண் டிருக்கும்போதே இவன் புலி வேட்டை யாடினேனென்று வெகு சாமர்த்தியமாகக் கூறுகிறான். (சத்தியவந்தனைப் பார்த்து) புலிவேட்டை யாடினேனென்றாயே, அது பெரும்புலியா அல்லது சிறுத்தையா?



சத். பெரும்புலி வேட்டைதான் ஆடினேன்.

சு. பெரும்புலி ஆணோ? பெண்ணோ?

சத். நான் புலிவேட்டையாடினேன் என்றால் நீயேன் பரிகாசம் செய்கிறாய்?

சு. அது எந்தமாதிரி புலி என்று கேட்டேனே தவிர, வேறொ ன்றுமில்லை.

சத். உனக்கு எப்போது பார்த்தாலும் விளையாடுகிறதே வேலை சமயாசமயந் தெரிகிறதில்லை.

சு. விளையாடுகிறதற்குச் சமயம்கூட வேண்டுமோ? உனக்குக் கவலை யெல்லாம் அந்தப்பெரும் புலியின்மீதே யிருக்கிறது போல் தோன்றுகிறது.

சத். (தனக்குள்) நானும் ஸாவித்ரியும் பேசிக்கொண்டிருந்ததை இவன் பார்த்திருப்பான்போல் காண்கிறது. இல்லாவிடில் இவன் என்னை யிவ்வாறு பரிகாசியான். (சுமாலியைப் பார்த்து) சுமாலி! உனக்கு ஒரு சமாசாரஞ் சொல்ல எண்ணி யிருந்தேன்.

சு. புலி வேட்டையாடினதில் புலியை நீ ஜெயித்தாயா? அல் லது புலி உன்னை ஜெயித்ததா?

சத். அந்தச்சமாச்சாரம் நான் கூறப்போகிறேன்.

சு. அந்தப்புலி அதிக அழகாயிருந்ததா?

சத். ஜலம் கொண்டுவர நீ போனபிறகு, ஒரு பெரும் புலியானது ஒரு புலத்தியைத் துரத்திக்கொண்டு அப்பக்கமாக ஓடிற்று. அதைப்பார்த்து நான் பின் தொடர்ந்து வேட்டையாடி அதைக் கொன்றேன்.

சு. உன்னுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்.

சத். நான் களைப்பால்வந்து படுத்திருக்கும்போது அச்சுந்தர மாது என்னை எழுப்பினாள்.

சு. வெகுசுந்தரம்! வெகுசுந்தரம்! அதன்பிறகு என்ன நடந்தது?

சத். அவளுடைய விருத்தாந்தத்தைக் விசாரித்தேன். நீ ஜலத்துக் குப் போயிருந்தாயே, அங்கே என்ன அதிசயம் பார்த்தாய்?

சு. வேறொன்றுமில்லை. இரண்டு புலிகளைப் பார்த்தேன்.

சத். இரண்டு புலிகளா?

சு. ஆம்.

சத். அவை எப்படி யிருந்தன?

சு. இரண்டும் ஒன்றாய் நின்றபோது வெகு அழகாயிருந்தன.

சத். (தனக்குள்) நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது பார்த்தே யிருப்பான். அதற்கு ஒன்றும் சந்தேகமே யில்லை. (சுமாலியை பார்த்து.) சுமாலி! புலிகளைப்பார்த்து நீ என்ன செய்தாய்?

சு. சமீபத்தில் போனேன். போனவுடன் ஒரு புலி ஓடிப் போயிற்று.

சத். மற்றொரு புலி என்ன செய்தது?

சு. ஓடிப்போன புலியைப் பார்த்துக்கொண்டிருந்தது?

சத். நீ என்ன செய்தாய்?

சு. இன்னம் சமீபத்தில் போனேன்.

சத். அது என்ன செய்தது?

சு. நான் சமீபத்தில் போகப்போக, அது என்னைப் பார்க்காமல் ஓடிப்போன புலியைப் பார்த்துக் கொண்டே யிருந்தது.

சத். அப்பால்?

சு. நான் குரல் கொடுத்தவுடன் மயங்கி என்னைப் பார்த்தது.

சத். பார்த்தவுடன் நீ என்ன செய்தாய்?

சு. நான் என்ன செய்கிறது. அதுவே என் அருகில் வந்தது.

சத். அந்தப் புலி எங்கே யிருக்கிறது? இப்போது எனக்குக் காட்டுகிறாயா?

சு. இங்கே.

சத். எதோ?

சு. இதோ, நீதான்.

சத். உனக்கு எப்போது பார்த்தாலும் விளையாட்டும், வேடிக்கையும் அதிகம். நாம் அதிக நேரமாய் இங்கே யிருந்து விட்டோம். சீக்கிரம் ஊர்போய்ச் சேரலாம். குதிரைகளைத் தயார் செய்.

சு. எங்கே போகிறாய்? புலியைப் பார்க்கப் போகிறாயா?

சத். இல்லை, இல்லை. இதோ உன்னுடன் வருகிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

25

# அங்கம். I.

## காட்சி 3.

இடம். சாலவபுரிக்கடுத்த காடு.

த்யுமத்சேனனும் பத்மாட்சியும் வருகிறார்கள்.

து. என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! கடகேது நம்மை என்ன ஹிம்சை செய்தான். நம்முடைய நாட்டை அபகரித்தது மல்லாமல் நமது கண்களையும் போக்கடித்ததும் தவிர காட்டிலும் விட்டு விடும்படிக் கட்டளையிட்டான். நம்மை யிப்போது காட்டில் விட்டுவிட்டார்கள். கண்கள் தெரிந்தால் எங்கேயாவது போய் பிழைக்கலாம். அதற்குமில்லை. நம்முடைய கதி இப்படியிருக்க புத்திரனை யென்ன கதிக்கு உட்படுத்துகிறார்களோ?

ப. சத்தியவந்தன் மணிபுரத்துக்குப் போயிருக்கிறானே, அவனுக்கு எப்படி தெரியும்? அவன் அங்கேயே யிருந்தால் நலமா யிருக்கும். அவன் சீக்கிரம் வரமாட்டானென்று நம்புகிறேன்.

து. சத்தியவந்தனை அழைத்து வரும்படியாய் நம் சுமாலியை அனுப்பி யிருக்கிறேன்.

ப. ஏன் இப்போது அழைத்து வர கட்டளையிட்டீர். அவன் வந்து என்ன செய்யப்போகிறான்.

து. சத்தியவந்தனைச் சேனாதிபதியுடன் சேர்ந்துக் கடகேதுவின் மீது போர்ப்புரிய அனுப்ப உத்தேசித்தேன். இதற்குள் நமக்கு இவ்வித ஆபத்து நேர்ந்தது. அவன் வந்தால் நம்மைப் பார்த்து யெப்படி சகிப்பான்.

ப. ஆனால் இப்பொழுது வந்திருக்க வேண்டுமே.

து. என்ன அசந்தர்ப்பத்தால் தடையாயிற்றோ? எதிரிகள் கையில் சிக்கிக்கொண்டானோ?

சத்தியவந்தனும் சுமாலியும் வருகிறார்கள்.

சத். நாம் இன்னும் வரவில்லையென்று தந்தை யென்னவருத்தப் படுகிறாரோ? என்ன? என் மார்பு படபடவென்று அடிக்

துக் கொள்ளுகிறது காரணம் யாதோ? எனக்குத் தெரியவில்லை! திகிலதிகமாகவிருக்கிறது.

சு. அதைரியப் படாதே! இளவரசே! அங்கே புலிவேட்டையாடினதின் இளைப்போ? அல்லது அந்த பெரும்புலியெப்படியிருக்கிறதோவென்ற மயக்கமோ?

சத். உனக்கு எப்போது பார்த்தாலும் வேடிக்கையும் விளையாட்டுமே. அதோ! நமக்குத் தெரிந்த குரலாக அழுகுரல் கேட்கிறது. அது யாருடையதாயிருக்கலாம். நாமோ ஊருக்கு வந்துவிட்டோம். சந்தடியில்லாமலிருக்கிறது. எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

சு. நான் போய் யாரென்று பார்க்கட்டுமா?

சத். வேண்டியதில்லை, நானும் முன்னுடன் வருகிறேன்.

சு. ஆனால் சரி, போகலாம். [அருகில் போகிறார்கள்.]

சத். ஐயா! ஐயா! தந்தையே! தந்தையே!
ஐயோ! ஐயோ! அம்மணி! அம்மணி!

ப. ஐயா! ஐயா! சத்தியவந்தா! சத்தியவந்தா!

து. ஐயா! ஐயா! குமாரா! குமாரா!

சு. ஐயா! ஐயா! மஹாராஜா! மஹாராணி! உங்களை இக்கோலத்துக்குக் கொண்டுவந்த சண்டாளன் எவன்? அப்பாதகன் கடகேதுவோ? உங்களை இக்கோலத்திற் பார்க்க என் மனம் சகிக்கவில்லையே.

சத். உங்களை இக்கோலஞ்செய்து இக்காட்டில் விட்டவர்களைக் கூறுங்கள். நான் பின்வாங்காமல் அவர்களைத் தோற்கடித்துப் பழிக்குப்பழி வாங்குகிறேன். ஐயையோ! என்ன கொடுமை! என்ன கொடுமை! இக்கொடுமையைப் பார்ப்பதைவிட நான் பிராணத்தியாகம் செய்துகொள்ளுகிறதே நலம்.

து. நிதானி.

ப. அவசரப்படாதே.

து. எங்களை இக்கோலத்துக்குக் கொண்டுவந்தவன் நம்மெதிரியாகிய கடகேதுவே. நம் நாட்டையபகரித்துமல்லாமல்





எங்கள் கண்களையும் போக்கடித்து, காட்டுக்குத் துரத்திவிட்டான்.

சு. என்னகொடூரம்! என்னகொடூரம்!

சத். குமாலி மணிபுரத்துக்கு வந்தவுடன் கடகேது நம்மீது படையெடுத்து வந்திருக்கிறுனென்று தெரியப்படுத்தவில்லையே.

து. நீ அதைரியப் படப்போகிறுயென்று கூறவேண்டாமென்றேன்.

சத். தெரிவித்திருந்தால் நான் முன்பே வந்திருப்பேனே. உங்களுக்கு இப்படி வாராதபடிச் செய்திருப்பேனே. இப்போதே உத்தரவளியும். நான் தனியேபோய் அச்சண்டாளனை ஜெயித்து நம் நாட்டை மீட்டு அவன்செய்த கொடுமையைப் பார்க்கிலும் அதிகமாக அவன் அநுபவிக்கும்படி செய்விக்கிறேன்.

து. நீ செய்வாயே, அதற்குத்தடையில்லை. நாங்கள் கேட்கப்பட்டதை மறுக்காமல் கொடுக்கவேண்டும்.

சத். உங்களை இக்கோலத்தில் கண்டு கூடவா கேட்கப்பட்டதை மறுப்பேன்!

து. சத்தியவந்தா! கடகேதுவின்பேரில் நீ தனியேபோய் போர்புரிவதில்லையென்றும், எங்களை விட்டுப் பிரிவதில்லையென்றும் வரந்தரவேண்டும்.

சத். தந்தையே! நீங் கேட்கப்பட்டதைச் செய்ய எனக்கொன்றுந் தடையில்லை. கடகேதுவை எப்படியாவது ஜெயித்து பழிக்குப்பழி வாங்கவேண்டுமே.

து. சத்தியவந்தா! நாங்கள் கேட்கப்பட்ட வரத்தைத் தருகிறுயா அல்லது பிராணத்தியாகஞ் செய்துகொள்ளட்டுமா?

சத். ஐயையோ! தங்கள் ஆக்கினைப்பிரகாரம் நடக்கக் காத்திருக்கிறேன்.

து. சத்தியவந்தா! குமாலியெங்கே?

சத். குமாலி பின்னே நிற்கிறுள்.

து. குமாலி!

சு. மஹாராஜா! உங்களையும், சத்தியவந்தரையும் பார்க்கவெனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஆகையால் நான் ஒரு புறமாயிருந்தேன். மன்னிக்கவும்.

து. எங்கள் கதி இப்படியாய்விட்டது. சுமாலி! நீ சுகமாய் சாலவபுரி போய்ச் சேர்ந்து பெண்டு பிள்ளைகளுடன் கூடி குலாவி வாழலாம்.

சு. மஹாராஜா! நான் சிறு வயது முதல் உங்கள் அன்னம் புசித்து, உங்களுடன் இருக்க, உங்களுக்கு தற்காலம் கஷ்டம் வந்து நீங்கள் காட்டிலேயே நான் நாட்டில்போய் சுகமாய் வாழ்வேனோ? நானும் உங்களுடன்தான் இருப்பேன்.

சத். சுமாலி! நீதான் நண்பன்.

ஸ்ரீ. சுமாலி! உன் பிரியம்.

சத். தந்தையே! தாயே! தாங்கள் ஆகாரமில்லாமல் வாடின முகத்தோடு காணப்படுகிறீர். எனக்கு உடனே உத்திரவு அளியும். ஆகாரம் சேகரித்துக்கொண்டு வருகிறேன்.

சு. இளவரசே! எனக்குக்கூட, எனக்குக்கூட.

து. சுமாலி! நீ எங்களைப்போல் புசியாமலிருக்கமாட்டாய், அதற்குத்தான் உன்னை ஊருக்குப் போகச் சொன்னேன்.

சு. மஹாராஜா! இல்லை, இல்லை.

து. சத்தியவந்தா! இக்காட்டில் என்ன அகப்படும்? காய்கனிகளைப் புசித்துக்கொண்டு காலங் கழிக்கவேண்டும். அவைகளையாவது கொண்டுவந்தால் புசித்துப் பசியாறலாம். நேரம் போகாதே. சுமாலியை அழைத்துப் போ.

சத். எனக்கு ஏன் துணை? சுமாலி தங்களருகில் இருக்கட்டும். நான் சீக்கிரம் வந்துவிடுவேன். [போகிறான்.]

து. சுமாலி! நீ எங்கேயிருக்கிறாய்?

சு. மஹாராஜா! நான் இங்கேயிருக்கிறேன்.

து. நீ போனவிடத்தில் என்ன அதிசயம்? மணிபுரத்தில் நம் மவர்கள் எப்படியிருக்கிறார்கள்? சுகந்தானா?

சு. மஹாராஜா! நம் நாட்டைத்தாண்டுகிறது மிகக் கடினமாயிருந்தது. எதிரிகளுடைய தொந்திரவு அதிகம். நான் ஓர் பிராமண வேடம் தரித்து நம் நாட்டை விட்டோடினேன்.



து. நீ சாமார்த்தியனானதினால்தான் உன்னை அனுப்பினேன்.

சு. மணிபுரத்துக்குப் போயிருந்ததில் இளவரசர் அங்கிருந்த ஸ்திரீ மணமாலை சூடித்தான் வருவாரென்று நினைத்தேன். எனக்கு மிக்க மரியாதைகள் நடத்திவைத்தார். அந்தச் சுகத்தில் தங்களை மறந்தாரென்று நினைத்தேன்.

து. அவன் தாய்தந்தையர் விஷயத்தில் மிக்க அன்புடையவனாச்சுதே!

சு. அதற்கென்னதடை. ஆனாலும் பெண்கள் விஷயத்தில் அருவெறுப்புடையவரும், விவாகமே வேண்டியதில்லை என்பவருமான இளவரசர் தன் மாமன் வீட்டில் அத்திடமெல்லாம் மாறி அம்மான் மகளுடைய மையலில் அகப்பட்டிருந்த போதிலும், தாங்கள் அழைத்து வரச்சொன்னதாகக் கூறினவுடன், அம்மயக்கங்களிலிருந்து தெளிந்து, அவர்கள் உத்திரவைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டார். வரப்பட்ட வழியில் அதைப் பார்க்கிலும் மிகவும் விந்தையானதைக் கண்டோம்.

து. சுமாலி! அது என்ன?

சு. மஹாராஜா! இளவரசர் பெரும்புலி வேட்டையாடி ஜெயித்து வந்திருக்கிறார்.

காட்சி முடிகிறது.

# அங்கம் II.

## காட்சி 1.

இடம்:—ஸாவித்ரியின் அறை.

ஸாவித்ரி தோழியுடன் பாடிக்கொண்டு வருகிறாள்.

தோ. தேவி! முன்பு ஒருநாள் நாம் தனியா யிருக்கும்போது இனித்த தொனியோடு ஒரு பாட்டு பாடினீர்களே அதைக் கேட்க எனக்கு பிரியமாயிருக்கிறது. அப்பாட்டை பாடும் அம்மணி.

ஸா. உனக்கு எப்போது பார்த்தாலும் பாட்டுப்பாடச் சொல்லுகிறதுதான் வேலை. என்னும் அப்பாட்டைப்பாட இப்போது முடியாது.

தோ. தேவி! இம்முறை மாத்திரம் பாடும். மறுவிசை கேட்க மாட்டேன்.

[ஸாவித்ரி பாட ஆரம்பிக்கிறாள்.]

ஸா. சகி! வாயோ பாட்டை பாடிக்கொண்டிருக்கிறது, மனமோ அதனிடத்தில் நில்லாது எங்கேயோ அலைந்துகொண்டிருக்கிறது. ஆகையால் இப்போது பாடமுடிய வில்லையே!

தோ. எங்கு அலையப்போகிறது? நம் நந்தவனத்தில் கண்ட புருஷனிடத்தி லிருக்கலாம்.

ஸா. உனக்கு எப்போது பார்த்தாலும் விளையாட்டே. இனி இம்மாதிரியாக விளையாடில் எனக்குக் கோபம் வரும்.

தோ. தேவி! கோபம் வரும், வரும்.

ஸா. சகி! அது என்ன சத்தம்.

தோ. பார்த்து வருகிறேன்.

[போகிறாள்.]

ஸா. சகி! என்ன?

தோ. தேவி! தங்கள் தாயார் வருகிறார்கள்.



மாலவி வருகிறாள்.

ஸா. அம்மணி! நமஸ்கரிக்கிறேன். இந்த ஆசனத்தில் உட்கார வேண்டும். என்னை அழைத்திருந்தால் நானே தங்களைப் பார்க்க வந்திருப்பேனே.

மா. கண்ணே! நீயும் உட்கார். ஏன் முகம் வாடியிருக்கிறது. உனக்கு என்ன வேண்டுமோ சொல். இதுவரையிலும் என்ன செய்துகொண்டிருந்தாய்?

தோ. தேவி! ஸாவித்ரிதேவி இதுவரையில் பாடிக்கொண்டிருந்தார்கள்.

மா. நான் இச்சமயத்தில் வந்தது அதற்கு ஏதாகிலும் தடையோ?

தோ. தேவி! முன்னமே பாடி நிறுத்தியாயிற்று.

ஸா. அம்மணி! அப்படி யொன்றுமில்லை. நான் எப்போதுமிருக்கிறது போல்தானிருக்கிறேன். இன்றைக்கு வேறுவிதமாய் இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. அம்மணி! தாங்கள் எந்தச்சமயத்திலும் என்னை வந்து பார்க்கலாம். தங்களுக்கு என்ன தடையிருக்கிறது.

மா. கண்மணி! என்னருகில் வந்து எனக்கு ஒருமுத்தம் தருவாயா? [முத்தம்கொடுக்கிறாள்.]

தோ. தேவி! நம் ஸாவித்ரிக்கு எவ்வளவு பருவம் வந்துவிட்டதால் தக்க வரனைத்தேடி மணமாலை சூட்டுவிப்பதற்கு ஏற்பாடு செய்விக்கவேண்டும்.

மா. சகி! அதுதான் எனக்கும் யோசனையாயிருக்கிறது. மகாராஜாவினிடத்திலும் இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அவர் சீக்கிரத்தில் தக்க ஏற்பாடு செய்வார்.

ஸா. அம்மணி! சகி விளையாடுகிறாள், அவள் வார்த்தையைக் கேளாதீர்.

மா. கண்ணே! உன் சகி விளையாட்டாகப் பேசியதும் ஏன் முகம் வாடியிருக்கிறாய்?

ஸா. உம், உம்.

தோ. அம்மணி! நாங்கள் நந்தவனத்திற்குப் போயிருந்தபோது யாரோ இரண்டு எவ்வளவுபுருஷரைக் கண்டோம். அது

முதல் ஸாவித்ரிதேவி அவர்களில் ஒருவர்பேரில் காதல் கொண்டிருக்கின்றாள் என்று யூகிக்க வேண்டியதாயிற்று.

ஸா. சகி! நீ மிக அதிகப்பிரசங்கி.

மா. கண்ணே! கோபியாதே. உன்னிடத்தில் உள்ள அன்பினால் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை.

தோ. அம்மணி! விடாதேயும். கேட்டு அச்சங்கதிகளைத் தெரிந்துகொள்ளும்.

ஸா. சகி! நீ மிக பொல்லாதவள். ஏது! சும்மாயிருக்கமாட்டாய் போலும்.

மா. கண்ணே! கோபியாதே. உன் அபிப்பிராயந் தெரிந்துதான உனக்கு மணம் நடத்த உத்தேசித்திருக்கிறோம்.

தோ. உங்கள் அபிப்பிராயத்தை என்னிடத்தில் ஒளித்ததுபோல் தேவியினிடத்திலும் ஒளியாமல் வெளியிடும். அவர்கள் தக்கபடி நடத்துவார்கள். அதற்கு ஒரு சமுசயமும் வேண்டியதில்லை.

மா. உன்னைப்பெற்ற தாயிடம் சொல்ல என்ன லஜ்ஜை. நான் அதன்படி நடக்க தடையொன்றுமிராது.

ஸா. அம்மணி! தாங்கள் என் அபிப்பிராயம் போல் நடத்துவீர்களா?

மா. கண்மணி! அதற்கு என்ன தடை?

ஸா. அம்மணி! நிஜந்தானா?

தோ. தேவி! நான் முன்னமே கூறவில்லையா?

ஸா. சகி! மறுபடியும் ஆரம்பித்தாய் போலும்.

மா. கண்ணே! எனக்கு நேரமாகிறது, சீக்கிரம் கூறு.

ஸா. அம்மணி! நாங்கள் நந்தவனத்திற்குப் போயிருந்தபோது ஒரு பெரும் புலி எங்கிருந்தோ ஓடிவந்து துரத்த, யான் அலறியோடும் சமயம், யாரோ ஒரு மகானுபாவர் அதைத் துரத்திவந்து கொன்றார். அவர் அத்தருணம் அவ்விடத்தில் இல்லாவிட்டால் நான் புலிக்கு இரையாகியிருப்பேன். உடனே இளைப்பால் அவர் படுத்துவிட்டார் போலும். அவருக்கு அப்புலி என்ன தீங்கு செய்ததோ என்று பயந்து அவரை விசாரித்தேன்.



தோ. (ஓடிவந்து) மகாராஜா அந்தப்புரத்தில் வந்திருக்கிறார். தங்களைச் சீக்கிரம் அழைத்து வரும்படிக் கட்டளையிட்டிருக்கிறார். உடனே வரவேண்டும்.

மா. கண்ணே! நான் போய்வருகிறேன். நீ கவலைப்பட வேண்டாம். சீக்கிரம் விவாகத்தை முடித்து வைக்கிறேன்.

[போகிறார்கள்.]

தோ. அம்மணி! என்னிடத்தில் இச்சங்கதிகளை ஒளித்தீர்களே, எனக்கு அவ்வளவு தெரியாதோ, தங்கள் முகத்தைப் பார்த்ததிலேயே அறிந்து கொண்டேன்.

ஸா. சகி! நீ மிக கெட்டிக்காரி. உனக்கு சோதிடம், வைத்தியம், மந்திரம் முதலியன நன்றாய் கைவருமென்று எனக்கு தெரியுமே. நீ பேசாமலிரு.

காட்சி முடிந்தது.

# அங்கம். II.

## காட்சி. 2.

இடம்.—அரண்மனையில் ஓர் அறை.

அஸ்வபதியும் மாலவியும் வருகிறார்கள்.

மா. பிராண காந்தா! ஏது அதிசயமாயிருக்கிறது? தாங்கள் வெகு சீக்கிரமாய் இங்கு வந்ததற்குக் காரணம் தெரியவில்லை. இங்கு உட்காருங்கள்.

அ. என் கண்ணே! மாலவி! எனக்கு ராஜாங்கத்து வேலை அதிகமாயிருந்தும் அந்தப்புரத்துக்கு அடிக்கடி வர சமயம் படுகிறதில்லை. ஆகையால் என்மேல் நீ கோபிக்கிறாய்?

மா. தாங்கள் இராஜாங்க வேலையைப் பார்க்கிறீர்கள், அரண்மனை வேலையை யார் பார்க்கிறது?

அ. கோபியாமல் சொல், அரண்மனையில் அப்படி என்ன வேலையிருக்கிறது? நான் அதை முடித்துத் தரும்படி செய்விக்கிறேன்.

மா. பிராணநாதா! வேறொன்றுமில்லை. நம்முடைய பெண் ஸாவித்திரிக்கோ வயது வந்து விட்டது. அவளுக்கு இன்னும் விவாகம் செய்யாமலிருந்தால் நாம் பழிக்கு ஆளாவோம். அவளுக்குத் தக்க மணவாளனைத் தேடி விவாகம் செய்ய எத்தனிக்க வேண்டும்.

அ. கண்மணி! என்ன செய்வது. அதுதான் எனக்கும் பெருங் கவலையாயிருக்கிறது. மந்திரிமார்களுடன் ஆலோசித்ததில் ஸாவித்திரிக்குத் தக்க வரன் கிடைப்பது அரிதாயிருக்கிறதென்று கூறுகிறார்கள்.

மா. பிராணபதி! அது ஏன்?

அ. கண்ணே! ஒவ்வொரு இராஜகுமாரரும் ஸாவித்திரியினுடைய அழகு, கல்வி, பொறுமை முதலிய எல்லா நற்குணங்களையும் கேள்விப்பட்டுத் தாங்கள் அவளுக்கேற்ற மணவாளனல்லவென்று கூறிவிட்டிருக்கிறார்கள்.



மா. பிராணநாதா! எல்லா இராஜ குமாரர்களும் இப்படிக் கூறிவிட்டால் நாமென்ன செய்கிறது?

அ. கண்ணே! ஸாவித்ரியை அழைப்பி. அவளுடைய அபிப்ராயத்தையுந் தெரிந்து கொள்வோம்.

மா. சகீ!

தோ. மகாராணீ!

மா. சகீ! ஸாவித்ரியைச் சீக்கிரம் அழைத்துவா.

[தோழி போகிறாள்]

தோ. நாரதமஹரிஷீஸ்வரர் மகாராஜாவவர்கள் பேட்டிக்கு வாசலில் வந்து காத்திருக்கிறார்.

அ. தடைசெய்யாமல் உடனே வரச்சொல்.

[தோழி போகிறாள்.]

நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.

அ. மகானுபாவரே! நமஸ்கரிக்கின்றேன்.

நா. கல்யாண்! கல்யாண்!

மா. நமஸ்காரம்.

நா. தீர்க்கசுமங்கலீபவ!

அ. ஸ்வாமீ! இவ்வாசனத்தில் எழுந்தருளவேண்டும்.

நா. அஸ்வபதி மகாராஜா! நீயுன் பத்நியுடன் உட்காரலாம்.

அ. ஸ்வாமீ! ஏது! தாங்கள் இவ்வளவு சிரமமெடுத்துக் கொண்டு எங்களுடைய அரண்மனையுட் புகுந்தது?

நா. இவ்வழியாக வந்து கொண்டிருந்தேன். உங்களைப் பார்த்து வெகுகாலமாயிற்றென்று வந்தேன்.

அ. ஸ்வாமீ! நாங்கள் செய்த புண்ணியமே புண்ணியம்.

மா. நாதா! நாம் செய்த பாக்கியமே பாக்கியம்.

அ. ஸ்வாமீ! நாங்கள் தங்களுடைய அபிப்ராயத்தினையுங் கேட்டு ஸாவித்ரியின் விவாகவிஷயமாய் ஆலோசித்துக் கொண்டிருக்கையிலேயே தாங்கள் வந்தது எங்களுக்கு மிகச் சந்தோஷகரமாயிருக்கிறது.

நா. என்ன ஆலோசனை செய்துக் கொண்டிருக்கிறீர்கள்?

அ. சுவாமீ! ஸாவித்ரிக்குத் தகுந்த வரன் கிடைப்பது அரிதாயிருக்கிறது.

நா. அஸ்வபதீ! அது ஏன்? இருக்கப்பட்ட இராஜகுமாரர்களில் யாருக்காவது விவாகம் செய்துக் கொடுக்கிறது தானே?

அ. சுவாமீ! ஒவ்வொரு இராஜகுமாரனும் ஸாவித்ரியை மணக்க தானிருந்தவனல்லவென்று கூறிவிடுகிறான். தாங்கள்தான் கிருபைசெய்துத் தக்க வரனைத்தேடி விவாகம் நடப்பிக்கவேண்டும்.

நா. அஸ்வபதீ! எனக்கு என்ன தெரியும்.

அ. சுவாமீ! திரிலோக சஞ்சாரியான தங்களுக்கு தெரியாததும் உண்டோ?

நா. அஸ்வபதீ! ஸாவித்ரியின் அபிப்ராயந் தெரிந்துகொண்டீரா?

அ. சுவாமீ! அவள் அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ளலாமென்றுதான் அவளை அழைத்துவர ஆளனுப்பியிருக்கிறேன். தாங்களும் இங்கிருந்து அவள் அபிப்ராயம் தெரிந்துக் கொள்ளலாம்.

நா. அதற்கென்ன தடை.

தோ. (ஓடிவந்து) மகாராணீ! ஸாவித்ரிதேவி வரலாமாவென்று கேட்டுவரச்சொன்னார்கள்.

மா. உடனே வரச்சொல். [தோழி போகிறாள்.]

ஸாவித்ரி பாடிக்கொண்டு வருகிறாள்.

அ. குழந்தாய்! நாரதமகாமுனீஸ்வரருக்கு நமஸ்காரஞ் செய்.

ஸா. முனிபுங்கவா! நமஸ்காரம்.

நா. மங்களாபிவர்த்து! தீர்க்கஸுமங்கலீபவ!

அ. குழந்தாய்! ஸாவித்ரி! நாங்கள் உனக்குத் தக்க வரனைத் தேடிப் பிரயாசைப் பட்டும் அகப்படாமல் மனசஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கையில் நாரதமகாமுனீஸ்வரர் தெய்விகமாய் வந்ததுமன்றி, உன் விவாக விஷயமாய் உன் அபிப்ராயத்தையும் அறிய விரும்புகிறார். ஆகையால்



உனக்குத் தக்க புருஷனை நீயே தேடும்படியாயிருக்கிறது. உன் அபிப்ராயத்தைத் தெரிவிக்கவும்.

ஸா. உம், உம்.

மா. குழந்தாய்! பெரியவர் வந்திருக்க, உன் தந்தை உன் அபிப்ராயத்தைக் கேட்க நீ மறுக்கலாகாது. உன் மனதிலிருப்பதைக் கூறு.

ஸா. உம், உம்.

நா. அஸ்வபதீ! ஸாவித்ரி என்னெதிரில் கூற லஜ்ஜைப் படுகிறாள்போலிருக்கிறது. நான் போய்வருகிறேன்.

அ. சுவாமீ! இருக்கலாம். தாங்கள் தயைசெய்து இருந்து கேட்டுதான் போகவேண்டும்.

மா. ஸாவித்ரீ! நாரதமகாமுனீஸ்வரர் கோபித்துப் போய்விடுவார் போலிருக்கிறது. உன்னைப்பெற்ற எங்களிடத்திலும், நம் குருவாகிய நாரதமகாமுனீஸ்வரரிடத்திலும் உன் அபிப்ராயந் தெரிவிக்க என்ன லஜ்ஜை.

ஸா. அம்மணீ! எனக்கு லஜ்ஜையாயிருக்கிறது.

மா. ஸாவித்ரீ! உன் தந்தையும் நாரதமகாமுனீஸ்வரரும் கோபியாதபடிக் கூச்சத்தைவிட்டு உன் அபிப்பிராயத்தை உடனே தெரிவி.

ஸா. நான் சாலவபுரி த்யுமத்சேனமகாராஜர் குமாரர் சத்தியவந்தர்பேரில் காதல் கொண்டிருக்கிறேன்.

நா. சத்தியவந்தனையா!

ஸா. ஆம்.

அ. சுவாமீ! அது ஏன் அப்படி கேட்டீர்!

நா. சத்தியவந்தன் என்றால் அவனுக்கே தகும். சத்தியமென்பதைக் கனவிலும் மறவாதவன். தந்தை சொற் கடவாதவன். வெகு புத்திமான். அழகில் மன்மதனைத்தோற்கடிக்கப்பட்டவன். மிக பராக்கிரமசாலி. இன்னும் அவன் புகழை ஆயிரநாப்படைத்த ஆதிசேடன் சொல்ல, இரண்டாயிரங் கைப்படைத்த பாணகம்பன் எழுதினாலும் முடியாது. அப்படிப் பட்டவனை ஸாவித்ரி இச்சித்தாளே என்று எனக்கு மிகவும் களிப்பாயிருக்கிறதானாலும்—

அ. ஸ்வாமீ! எதுவாயிருந்தாலும் கூறலாம்.

நா. சத்தியவந்தனுடைய தகப்பன் இப்பொழுது நாடுநகரமெல்லா மிழந்தும், தானும் தன்மனைவியும் கண்ணிழந்தும், சத்தியவந்தனும் அவர்களுடன் காட்டில் மிக கஷ்டத்துடன் சஞ்சாரஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனாலும், மற்றொன்று என்னை மிகப் பாதிக்கிறது—.

அ. முனிபுங்கவரே! அது என்ன?

நா. அஸ்வபதியே! அவனுக்கு ஆயுசு அற்பாயுசு, அவனது ஆயுள் இன்றுமுதல் ஒருவருட காலந்தான்.

ஸா. சிவ! சிவ!

அ. ஸாவித்ரீ! முனிவர் சொல்வதைக் கேட்டாயா? ஆகையால் வேறொருவனையாவது தேடி மணப்பாயாக.

ஸா. முனிபுங்கவா! சத்தியவந்தருக்குத் தீர்க்காயுசாயிருந்தாலும் அற்பாயுசாயிருந்தாலும் நான் அவரை மணந்தாய் விட்டது. அவரைத் தவிர வேறொருவரையும் விவாகஞ் செய்துகொள்ளமாட்டேன்.

அ. ஸாவித்ரீ! நீ சத்தியவந்தனை உன் கணவனாக மனதில் மணந்துகொண்டிருக்கிறாயே தவிர எல்லோரும் அறிய விவாகம் நடப்பித்துக் கொள்ளவில்லையே.

ஸா. நான் அவரை எப்பொழுது என் பதியென்று நினைத்துவிட்டேனோ, அப்பொழுதே எனக்கும் அவருக்கும் விவாகம் நடந்ததுபோலாகும். ஆகையால் என் பதிவிரதாதர்மத்துக்குப் பங்கம் வாராமல் என்னை அவருக்கே விவாகஞ் செய்து வைக்கும்படி உங்களை மிகவும் பிரார்த்திக்கின்றேன். இல்லையேல் பிராணத்தியாகம் செய்துகொள்ள வேண்டும்.

மா. ஸாவித்ரீ! உன் பிடிவாதத்தை விட்டொழி.

அ. மாலவி! ஸாவித்ரியின்மேல் கோபியாதே.

மா. பிராணநாதா! அவளோ குழந்தை. அவளுக்கு என்ன தெரியும். நம்மிஷ்டம் போல் நடப்பிக்கலாம். என் தம்பிக்கு ஒரு மகனிருக்கிறான். நம் குழந்தையும் ஏகபுத்ரி



யாதலால் அவனுக்கு விவாகம் செய்துகொடுத்து, நம் அரண்மனையிலேயே வைத்துக்கொள்ளலாம்.

அ. மாலவி! யோசிப்போம்.

நா. அஸ்வபதீ! நீயே புண்ணியவான். உன் குழந்தை ஸாவித்ரி வயதில் சிறியவளாயிருந்தபோதிலும் புத்தியிற் பெரியவளாய் காணப்படுகிறாள். அவளிஷ்டம்போல் தன் பதிவிரதாதர்மத்துக்குப் பங்கம் வராமல் சத்தியவந்தனுக்கே விவாகம் செய்துகொடு. ஸ்ரீரத்னமாகிய ஸாவித்ரிக்கு என்னாலான உபகாரஞ் செய்விக்கிறேன்.

அ. முனிபுங்கவா! உத்திரவு.

நா. அஸ்வபதீ! நான் போய்வருகிறேன்.

அ. நமஸ்காரம்.

நா. கல்யாண்! கல்யாண்!

மா. நமஸ்கரிக்கின்றேன்.

நா. தீர்க்கசுமங்கலீபவ.

ஸா. முனிபுங்கவா! நமஸ்கரிக்கின்றேன்.

நா. மங்களவதிபவந்து! தீர்க்கசுமங்கலீபவ.

[நாரதர் பாடிக்கொண்டு போகிறார்.]

காட்சி முடிகிறது.

## அங்கம்-II.

### காட்சி 3.

இடம்: சால்வபுரியை அடுத்த காடு.

த்யுமத்சேனனும் பத்மாட்சியும் காட்டில் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

து. சுமாலீ! சத்தியவந்தா! எங்கே யிருக்கிறீர்கள்?

சு. ஏன் கூப்பிடுகிறீர்கள்?

து. யார் அது?

சு. நான்தான், சுமாலி.

து. சுமாலீ! சத்தியவந்தன் எங்கே?

சு. இளவரசர் இக்காட்டின் விநோதங்களைப் பார்த்துவரப் போயிருக்கிறார்.

து. யாருடன்?

சு. தனியாக.

து. நீயும் அவனுடன் போகக்கூடாதா?

சு. நானும் வருகிறேன் என்றுசொல்ல, என்னை, தங்களுடன் இங்கே யிருக்கும்படி கூறிப்போயினார்.

து. எங்களுக்கு அப்போதே கூறலாகாதா! உன்னையும் அவனுடன் அனுப்பி யிருப்போமே.

சு. எனக்கு இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வந்தது. ஓகோ! ஓகோ! இளவரசர் காட்டைச் சுற்றிப்பார்க்கப் போகவில்லை. இக்காட்டில் ஏதாவது புலிவேட்டை யகப்படுமோ வென்று போயிருப்பார்.

து. அவனுக்கேது புலிவேட்டை யாடுவது!

சு. புலிவேட்டையில் இளவரசர் சாமர்த்தியர். மிக சாமர்த்தியராயிற்றே! அவருடைய சாமர்த்தியத்தை மகாபுரத்தி லிருந்து வரும்போது ஒரு சிறிய காட்டில் பெரும்புலியை



வேட்டையாடி ஜெயித்து வந்திருக்கிறாரென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். அதை மறந்து விட்டீர்கள் போலும்.

து. இக்காட்டில் பெரும்புலி யிருப்பதாவது.

சு. நான் கூறுவது நாலுகால் புலியல்ல. இரண்டுகால் புலி.

து. சுமாலி! என்ன விளையாடுகிறாய்?

அஸ்வபதி மாலவி ஸாவித்ரி தவமுனியுடன் வருகிறார்கள்.

தவ. அஸ்வபதி மகாராஜா! இதோ இவர்கள்தான் த்யுமத்சேன மகாராஜாவும், அவருடைய மனைவியும்.

சு. (தனக்குள்) வருகிறவர்கள் யாரோ தெரியவில்லை!

து. யாரது?

தவ. த்யுமத்சேனமகாராஜா! அஸ்வபதிமகாராஜா தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.

து. ஹா! ஹா! அஸ்வபதி மகாராஜாவா!

அ. ஐ! ஐ! என்ன கஷ்டம்! என்ன கோரானம! இக்கோலத்தில் உங்களைப் பார்க்கவேண்டி வந்ததே.

து. எங்கள் தலைவிதி யிப்படி யாயிற்று. என்ன செய்யலாம்?

அ. உங்களை இக்கதிக்குக் கொண்டுவந்தவன் எச்சண்டாளன்?

து. அச்சண்டாளனைப்பற்றி இப்போது என் நினைவு கூட்டுகிறீர் தாங்கள். என்னைப் பார்க்கவந்த காரணம் யாதோ? இவருந் தங்களுடன் வந்தவர்கள் யார்? கூறுவீர்கள்?

அ. நானும், மாலவியும், எனது புத்ரி ஸாவித்ரியும் அவருடைய விவாகத்தைப்பற்றித் தங்களுடன் யோசித்துப்போகலாமென்று உத்தேசத்துடன் வந்தோம்.

து. மாலவிதேவி! ஸாவித்ரி! இப்படி வந்து உட்காருங்கள்.

சு. (தனக்குள்) வந்தவர்களில் அந்த யௌவன மாதை நான் எங்கேயோ பார்த்தாப்போ லிருக்கிறது. சரி, சரி, சத்தியவந்தர் வேட்டையாடின பெரும்புலியா யிருக்கலாம்.

து. சுமாலீ! புலியா! புலியா!

சு. நாலுகால் புலியல்ல, இரண்டுகால் புலி, பயப்படாதேயும்.

து. என்ன விளையாடுகிறாய்?

சு. நான் ஏன் விளையாடுகிறேன். சத்தியவந்தர் வேட்டையாடி ஜெயித்த புலி, சத்தியவந்தரை ஜெயிக்கவந்ததென்று கூறுகிறேன்.

து. உனக்கு எப்போதும் விளையாட்டே பெரிது. நீ பேசாமலிரு.

சு. உத்தரவு.

து. அஸ்வபதிமகாராஜா! தங்களுடைய புதல்வியை யாருக்கு விவாகம் செய்விக்க உத்தேசம்? அதற்கு என் அனுமதி ஏன்?

அ. தங்கள் குமாரர் சத்தியவந்தருக்கு. ஆகையால் தங்களுடைய அனுமதி வேண்டியது.

சு. நான் அப்போதே கூறவில்லையா!

து. இது என்ன விந்தை! நாங்கள் நாடு நகரமிழந்து காட்டில் அன்னமாகாரமில்லாமல் காய் கனிகளைப் புசித்துக்கொண்டிருக்கும் போதா என் குமாரனுக்கு விவாகம்?

அ. தங்கள் குமாரருக்கும், என் புத்திரிக்கும் விவாகம் செய்வித்து, நம் நாட்டில் போய் சுகமாய் காலம் கழிக்கலாம்.

து. நானாவது காட்டைவிட்டு நாட்டை அடைவதாவது.

அ. நம் நாட்டிற்கு வர என்ன தடை?

து. என்னுட்டையும் அடைய எனக்கு அபிப்ராயமில்லை.

ப. மாலவி! நாங்கள் நாட்டிலிருந்த சுகத்தைவிட்டு காட்டில் காய்கனிகளைத் தின்று காலங்கழித்து வருகிற காலத்தில் ஸாவித்ரி சத்தியவந்தனை மணந்து எங்களுடன் இக்காட்டில் காலங் கழிக்க வருமே. உன் புத்ரிக்கு நீ புத்தி கூறலாகாதா?

மா. அவள் சத்தியவந்தரையே மணக்க ஒரே பிடியாயிருக்கிறாள். நாங்கள் எவ்வளவு கூறியுங் கேட்கவில்லை.

ப. ஸாவித்ரீ!

ஸா. ஏன் அம்மணி!

ப. சத்தியவந்தனைப் பார்க்கிலும் அழகிலும், பராக்ரமத்திலும் செல்வத்திலும், சிறந்த இராஜகுமாரர்கள் இருக்கிறார்களே, அவர்களை விட்டு ஏன் சத்தியவந்தனை மணக்க இச்சிக்கிறாய்,



நீ பார்க்கச் சிறு குழந்தையாயிருக்கிறாய். அரண்மனையில் பல சௌக்கியங்களிலிருந்தும், சத்தியவந்தனை மணந்து, காட்டில் வசிக்க ஏன் இச்சிக்கிறாய்?

ஸா. அம்மணி! நான் எப்போது என் மனதில் அவரை என் கணவரென்று நினைத்தேனோ அப்போதே நான் அவரை மணந்தாயிற்று. பெண்களுக்குப் பூஷணம் பதிவிரதா தர்மமல்லவா? அப்படியிருக்க வேறொரு புருஷனைக் கனவிலுங் கணவரென்று நினைப்பேனோ?

ப. மாலவி! உன் புதல்வி மிகக் குணவதியாகக் காணப்படுகிறாள். அவளைப் பெற்ற நீயே புண்யவதி.

அ. த்யுமத்சேனமகாராஜா! ஸாவித்ரி கூறுவதைக் கேட்டீரா?

து. அஸ்வபதிமகாராஜா! தங்கள் அபிப்பிராயத்திற்கும், ஸாவித்ரியின் வைராக்கியத்திற்கும் இக்காட்டில் இக்காலத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகின்றேன்.

அ. த்யுமத்சேனமகாராஜா! நாமிங்கு இவ்விடத்திலேயே எனது புத்ரி ஸாவித்ரிக்குந் தங்கள் புத்திரர் சத்தியவந்தருக்குந் திருமணம் நடத்த உத்தேசம். எங்கே சத்தியவந்தர்?

து. சத்தியவந்தன் இக்காட்டைச் சுற்றிப்பார்த்து வரப்போயிருக்கிறான். அவனை உடனே அழைத்துவரச் சொல்லட்டுமா?

அ. அப்படியே செய்க.

து. சுமாலி! நீ போய் சத்தியவந்தனை அழைத்து வருவாய்.

சு. மகாராஜா! சத்தியவந்தர் புலிவேட்டையிலிருந்தால் என்ன செய்கிறது?

து. மறுபேச்சு பேசாமல், நீ போய் சத்தியவந்தனை அழைத்து வருவாய்.

சு. ஹா! ஹா! அப்படியே செய்கிறேன். [போகிறான்.]

காட்சி முடிந்தது.

# அங்கம். II.

## காட்சி 4.

இடம்.—சாலவபுரியையடுத்த காட்டில் ஒரு வழி பாட்டை. சத்தியவந்தன் மனவருத்தத்துடன் பாடிக்கொண்டு வருகிறான்.

சத். என்வாய் பாடிக்கொண்டிருந்தாலும் என் மனமோ அப்பாட்டில் லயப்படவில்லை. என்னுடல் இங்கிருந்தாலும் என் மனம் எங்கேயோ அலைகின்றது. ஓகோ! ஓகோ! தெரிந்துக் கொண்டேன். அந்நந்தவனத்தில் ஸாவித்ரியைக் கண்டது முதல் என்மனம் அவளிடத்திலேயே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது. ஹா! ஸாவித்ரீ! ஸாவித்ரீ! இதுவரையிலும் எங்கிருந்தாய்? என் காதலியே அந்நந்தவனத்தில் நின்றதுபோல் இப்போது எனக்கொரு முத்தம் தரலாகாதா! ஹா! ஸாவித்ரீ! ஹா! ஸாவித்ரீ! எங்கு ஓடுகிறாய்! நான் உன்னை விட்டுவிடுவேனென்று பார்க்கிறாயோ! ஒருகாலும் என்னைவிட்டு போகமுடியாது. ஐயையோ! ஓடிப்போகிறாயே! ஐயையோ! ஸாவித்ரீ! எப்போது பார்க்கப்போகிறேன்! என்ன! பித்தனைப் போல் நடக்கிறேன். எங்கு பார்த்தாலும் ஸாவித்ரீயின் உருவாகவே யிருக்கிறதே! ஸாவித்ரீ! ஸாவித்ரீ! அகப்பட்டாயோ! (முழங்காலைக் கட்டிக்கொண்டு) என் கையில் சிக்கிக் கொண்டபிறகு கூடவா உன்னை விடுவேன்! எனக்கொரு முத்தம் தராமல் ஓடிப்போய் விட்டாயே! நான் உன்னை விடுவேனென்று நினைத்தாயோ! ஒருகாலும் விடேன். நீ எனக்கு முத்தம் கொடாமல் போனாலும் நானுனக்குக் கொடுக்கிறேன். (முழங்காலுக்கு முத்தம் கொடுக்கிறான்). ஐயையோ! ஐயையோ! ஓடிப்போய் விட்டாளே. என்ன! எனக்குப் பைத்தியம் பிடித்ததா! நான் எங்கிருக்கிறேன்! என்ன புத்திஹீனமான நடத்தை நடக்கின்றேன். ஸாவித்ரியாவது இங்கு வருவதாவது எப்போதும் ஸாவித்ரியின் ஞாபகமே அதிகமா யிருக்கிறது. அந்நந்தவனத்திற்குப் போகாம லிருக்கக் கூடா



தா! ஸாவித்ரியைப் பாராமலிருக்கக் கூடாதா! ஸாவித்ரீ! இப்போது என்ன சுகியாயிருக்கிறாயோ! ஸாவித்ரீ! நீ என்னிடத்தில் என்னென்னவெல்லாம் கூறினாய்! என்னிடத்தில் என்ன காதல்? என்ன காதல் வைத்திருக்கிறாய்! நீ சொன்ன சொற்களெல்லாம் எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகின்றனவே. என்ன திடமான வார்த்தைகளைக் கூறினாய்! மணந்தால் உன்னை மணப்பேன், இல்லையேல் இறப்பேன். என்ன வைராக்கியம்! என்ன வைராக்கியம்! காதலி! காதலி! அந்நந்தவனத்தில் என்னைப்பார்த்த பார்வையை என்னென்று சொல்லுவேன்! எப்படி மறப்பேன்! என்ன! பித்தனைப்போல் பிதற்றிக் கொண்டிருக்கிறேன்! நான் வந்த வேலையென்ன! நான் செய்துகொண்டிருப்பதென்ன! ஸாவித்ரியை மறக்கலாமென்றாலும் முடியவில்லையே! ஸாவித்ரீ! உன்னை மனைவியாக அடையப்பட்டவனல்லவோ பாக்கியவான். நான் உன்னுடைய காதலைப் பெற்றும் உன்னை மணக்க கொடுத்து வைக்கவில்லையே! நீ என்னைப்பற்றி என்ன நினைக்கிறாயோ! உன்னைக்கண்டது முதல் என்னுயிர் உன்னிடத்திலேயே லயமாகி விட்டதே! உன்னைக்கண்டு கூடவா வேறொரு ஸ்திரியை மோகிப்பேன்! உனக்கு வாக்கு கொடுத்த பிரகாரம் உன்னையே மணப்பேன்; அல்லது இறப்பேன். தவிர, வேறொரு ஸ்திரியை மணப்பேனென்று எண்ணுகிறாயோ! ஸாவித்ரீ! ஸாவித்ரீ! அப்படி ஒருகாலும் நினையாதே! ஆனால் இப்போது என்சொல்பிரகாரம் உன்னை மணப்பதற்கு இடையூறுகள் நேரிட்டனவே. ஸாவித்ரீ! நானே சீக்கிரம் வருகிறேன் என்றவன் வரவில்லையென்று பிராணத்தியாகம் செய்துகொண்டாயோ! ஸாவித்ரீ! நான் இதோ வந்து விட்டேன். (நடக்கிறான்.) எனக்கு என்ன பைத்தியம் பிடித்ததா! இல்லை, இல்லை. நான் நன்றாய் தானிருக்கிறேன். ஆனால் ஸாவித்ரியின் ஞாபகம் அதிகமாயிற்று. ஸாவித்ரீ! வேறெந்த ராஜகுமாரனையாவது காதலித்து சுகமாய் வாழக்கூடாதா! என் தாய் தந்தையரோ! நாடுநகரமிழந்து, கண்களும்போய், காட்டில் பரதவித்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் அவர்களுடன்

அலைந்துகொண்டிருக்கிறேன். இச்சமயத்தில் நான் கூறி
யபடி உன்னை எப்படி மணப்பேன்! என்னை நீ மணந்
தால் இக்காட்டில் நாங்கள் படும் கஷ்டத்துடன் நீயும்
கஷ்டப்படவேண்டுமே! என்றால் அக்கஷ்டத்தைப் பார்த்
துச் சகிக்கமுடியாதே! இப்படிப்பட்டவனை ஏன் காத
லித்தாய்! இக்காதல் மெய்யான காதலாயிருந்தால்,
இவ்வசந்தர்ப்பங்க ளெல்லாம் நேரிட்டிராவே. ஜகதீசா!
அக்கொடிய கடகேது வல்லவோ, இவற்றிற் கெல்லாம்
காரணர்த்தமா யிருந்தான். அப்பாதகனை அப்போதே
கொன்றிருந்தால் ஸாவித்ரியை மணந்திருப்பேனே. என்
தந்தையல்லவோ அதற்குத்தடையாயினர். இவையெல்லாம்
என் பூர்வகர்மமென்றே நினைக்கவேண்டுமே தவிர அவர்
களைப் பழிப்பானேன்! ஜகதீசா! ஸாவித்ரி மணந்தால்
உங்களை மணப்பேன், இல்லையேல் இறப்பேன் யென்
றனே! நீர்தான் எங்களுக்குக் கதி. நாங்கள் என்ன செய்யக்
கூடும். நான் ஸாவித்ரியிடம் போகலா மென்றாலும் என்
தாய் தந்தையரை விட்டுப் பிரியக்கூடாதவனா யிருக்கிறேன்.
இக்கஷ்டங்களை யனுபவிப்பதைவிட பிராணத்தியாகம்
செய்துக்கொள்ளலாமென்றாலும் தாய்தந்தையரிடமுள்ள
அன்பினாலும், ஸாவித்ரியினிடத்துள்ள காதலினாலும்
நான் என் பிரியம்போல் பிராணத்தியாகஞ் செய்துக்கொள்ள
முடியவில்லையே! ஸாவித்ரீ! ஸாவித்ரீ! உன்னை மறக்கலா
மென்றாலும் மறக்க முடியவில்லையே. நான் பைத்தியக்
காரனைப்போல் பிதற்றிக் கொண்டிருந்தால், என் தாய்
தந்தையரும், என் பிரியன் சுமாலியும் என்னைக்காணாமல்
இக்காட்டில் என்ன வருத்தப்படுகிறார்களோ! போகலா
மென்றாலோ ஸாவித்ரியின் ஞாபகம் என்னைப்போக விட
வில்லை. ஜகதீசா! எங்கள் காதல் மெய்க்காதலாக விருந்
தால் நீர்தான் அதை மெய்ப்பிக்கவேண்டும். அதிக நேரமாய்
விட்டது. போகலாமென்றால் யாரோ ஒரு கிழப் பிராம
ணன் எதிரில் வருகிறார். அவர் யாரென்று விசாரித்துப்
போகலாம். அவர் ஒருகால் மத்ராபுரியிலிருந்து வரப்
பட்டவரா யிருந்தால் ஸாவித்ரியின் விருத்தாந்தத்தை விசா
ரித்து போகலாம்.



சுமாலி ஒரு கிழப்பிராமண வேடம் பூண்டு வருகிறான்.

சத். யாரையா அது?

சு. என்னைப்பார்த்தவுடன் தெரியவில்லையா?

சத். நீர் கிழவர் என்று தெரிகிறது. நீர் யார் சொல்லும்?

சு. சாலவபுரிக்கு வழிகாட்டுமையா!

சத். முன்பு நீர் யார் சொல்லும்?

சு. என்னை ஏன் தடுக்கிறாய்? நான் சீக்கிரம் போகவேண்டும்.
வழி காட்டுவாய் ஐயா.

சத். நான் கேட்பதற்குப் பதில் கூறுகிறீரா? என்ன!

[அடிக்கிறதுபோல் போகிறான்.]

சு. நான் ஒரு கிழப் பிராமணன். ஐயா! என்னருகில் வாதா
தேயும்.

சத். கிழப்பிராமண னென்று தெரிகிறது. எங்கு போகிறீர்?

சு. சாலவபுரிக்குப் போகிறேன்.

சத். எதற்கு?

சு. அவையெல்லாம் உமக்கேன்? வழி காட்டையா? நான்
போகவேண்டும்.

சத். இதுதான் வழி.

சு. நீங்கள் யாரையா?

சத். என்னையா நீர் கேட்கிறீர்?

சு. நீர் என்னைக் கேட்டீரே.

சத். அதற்கென்ன?

சு. உன்னைப் பார்த்தால் இராஜ குமாரனைத் தோன்றுகிறதே.

சத். இல்லை, இல்லை. நான் இக்காட்டில் வசிப்பவன். நீர் எங்
கிருந்து வருகிறீர்?

சு. உன்னுடைய விருத்தாந்தத்தைக் கூறினால், நான் என் ஊர்,
பெயர் முதலியவற்றைக் கூறுவேன்.

சத். முன்பு உம்முடையதை கூறும், பிறகு நான் கூறுகிறேன்.

சு. நான் ஒரு கிழப் பிராமணன். ஐயா! மத்ராபுரியிலிருந்து
வருகிறேன்.

சத். மத்ராபுரியா!

சு. உங்களுக்கந்த ஊர் தெரியுமா?

சத். நான் ஒரு தடவை போயிருக்கிறேன்.

சு. எதற்கு?

சத். நான் என் விருத்தாந்தங்களைப் பின்பு சொல்வதாய் முன்பே கூறினேன். மறந்துவிட்டீரோ? உங்களுக்கு அங்கு என்ன வேலை?

சு. நான் அஸ்வபதி மகாராஜன் அரண்மனைப் புரோஹிதன்.

சத். அப்படியா! ஸாவித்ரி தெரியுமா?

சு. ஸாவித்ரியா!

சத். அஸ்வபதி மகாராஜன் குமாரத்தி.

சு. ஓஹோ! இராஜகுமாரத்தியா!

சத். ஸாவித்ரி சௌக்கியமாயிருக்கிறாளா?

சு. அரண்மனையில் சௌக்கியத்திற்கு என்ன குறைவு. தங்களுக்கு அவள் தெரியும்போலிருக்கிறதே?

சத். இல்லை, இல்லை. நீர் புரோஹிதராயிற்றே, என்று கேட்டேன்.

சு. நான் புரோஹிதனானால் எனக்கு அந்தப்புரத்தில் என்ன வேலையிருக்கிறது?

சத். அப்படியானால் ஸாவித்ரியைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாதோ?

சு. உங்களுக்கு ஸாவித்ரி தெரியும் போலிருக்கிறதே.

சத். எனக்கு என்ன தெரியும்?

சு. அரண்மனையில் மற்றவர்களிருக்க ஸாவித்ரியை நீங்கள் ஏன் விசாரிக்கவேண்டும்.

சத். அவையெல்லாமிருக்கட்டும், தாங்கள் புரோஹிதராயிற்றே, ஸாவித்ரிக்கு விவாகமாயிற்றா?

சு. உங்களுக்கு ஸாவித்ரியைப் பற்றிய சங்கதிகள் ஏன்? எனக்கு நேரமாகிறது. நான் போகவேண்டும்.

சத். நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் கூறிப் போகிறீரா? என்ன! (அடிக்கிறதுபோல் போகிறான்.



சு. கர்னே கிழவன், என்னருகில் வராதேயும்.

சத். ஸாவித்ரிக்கு விவாகமாயிற்றா?

சு. அக்காரணமாகத்தான் இப்போது சாலவபுரிக்குப் போகிறேன்.

சத். ஏன்?

சு. சாலவபுரியில் அவளுக்கு ஒரு வரனைத்தேட.

சத். அவன் யார்?

சு. அவன் பெயர் ஞாபகவரவில்லையே.

சத். அவன் தகப்பன் பேராவது தெரியுமா?

சு. தங்களுக்குச் சாலவபுரியிலிருக்கப்பட்டவர்கள் தெரியும் போலிருக்கிறதே.

சத். எனக்குச் சிலர் தெரியும். நானங்கிருந்தவன்தான். அப்போது ஸாவித்ரி த்யுமத்சேன மகாராஜனுடைய குமாரன் சத்தியவந்தனை விவாகம் செய்துகொள்ளப் போகிறாளென்ற வதந்தியைக் கேள்விப்பட்டேன்.

சு. அது மெய்தான். ஸாவித்ரிக்குச் சத்தியவந்தனை மணக்கப் பிரியமே.

சத். ஓ! அப்படியா!

சு. ஆனால் அஸ்வபதி மகாராஜனுக்கும் மாலவி தேவிக்கும் பிரியப்படவில்லை. என்னை யழைத்து ஆலோசனை செய்ததில் நான் ஓர் யுக்திசெய்தேன்.

சத். அது என்ன?

சு. சத்தியவந்தன் இறந்துவிட்டானென்று வதந்தி யுண்டாக்கினேன்.

சத். அப்படியா செய்தீர்!

சு. அவன் உங்களுக்குத் தெரியுமா?

சத். என் நண்பனாயிற்றே! பிறகு.

சு. அஸ்வபதி மகாராஜன் ஸாவித்ரிக்கு மணந்தேருதல் செய்து தகுந்தவரனைக் கண்டுபிடிக்க என்னை அனுப்பினார்.

சத். ஸாவித்ரி வேறு புருஷனை விவாகம் செய்துகொள்ள பிரியப்பட்டாளோ?

சு. பிரியப்பட்டாலும், படாவிட்டாலும் நாங்கள் விவாகத்தை முடித்தே தீருவோம்.

சத். ஆ! பாதகா! இப்படியும் செய்வாயா! [அடிக்கிறான்.]

சு. என்னை யடிக்காதேயும். சத்தியவந்தா! நான்தான் சுமாலி.

சத். சுமாலி! இதுவும் விளையாட்டா!

சு. சத்தியவந்தா! நான் விளையாடினதற்கு மன்னிக்கவும். ஸாவித்ரிதேவி நாமிருக்கப்பட்ட இடத்திற்குத் தன் தாய் தந்தையருடன் உன்னை மணக்கவந்திருக்கிறாள். அஸ்வபதி மகாராஜர் முதலாயினோர் உன் தந்தையுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உன் தந்தை உன்னை உடனே அழைத்து வரும்படிக் கட்டளையிட்டார். புறப்படுங்கள் போகலாம்.

சத். அஸ்வபதி மகாராஜாவாவது மாலவிதேவியாவது, ஸாவித்ரியாவது, இக்கொடுங்கானகத்தில் வந்திருப்பதாவது. நான் நம்பவேமாட்டேன். நீ இது வரையில் விளையாடினதுபோல் இன்னும் விளையாடுகிறாய் போலும். நான் வரவேமாட்டேன்.

சு. ஸாவித்ரி யிங்குவந்திருந்தால் நீ எனக்கு என்ன வெகுமானங் கொடுக்கிறாய்?

சத். நீ இன்னமும் விளையாடுகிறாய்.

சு. இல்லை. போகலாம் வா.

சத். நான் வரவேமாட்டேன்.

சு. நீ வராவிடில் உன்னை நான் இழுத்துக்கொண்டு போகிறேன். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# அங்கம்: II.

## காட்சி. 5.

இடம்.—சாலவபுரியை யடுத்தகாடு.

த்யுமத்சேனன், பத்மாட்சி, அஸ்வபதி, மாலவி, ஸாவித்ரி தவமுனி, முதலியோர்.

த்யு. யார் இங்கிருக்கிறது? சுமாலி சத்தியவந்தனை அழைத்து வந்தானா?

அ. த்யுமத்சேனமகாராஜா! இன்னும் அழைத்து வரவில்லை. தம்மருகில் இங்கு என்னை அழைத்துவந்த தவமுனி யிருக்கிறார். அழைத்துவரும்படி அவரை யனுப்பவா?

த்யு. அஸ்வபதிமகாராஜா! சுமாலி சத்தியவந்தனைக் கட்டாயங் கூட்டி வருவான், தவமுனிவரை ஓர் புரோகிதரை அழைத்துவரும்படி அனுப்பவும்.

அ. தவமுனீஸ்வரரே! நீங்கள் சீக்கிரம்போய் ஓர் புரோகிதரை யழைத்து வாருங்கள்.

தவ. இக்காட்டில் புரோகிதர் எங்கு அகப்படப்போகிறார்.

த்யு. தவமுனீஸ்வரரே! சாலவபுரி மிகவும் அருகாமையிலிருக்கிறது. நீர் போய் சீக்கிரம் ஓர் புரோகிதரை அழைத்து வாரும்.

தவ. மகாராஜா! அப்படியே. [போகிறான்.]

ப. மாலவி! ஸாவித்ரிக்கு இப்போதாவது புத்திமதி கூறி சத்தியவந்தனை மணக்காதபடிச் செய்யக்கூடாதா? பின்பு சத்தியவந்தனை மணந்து இக்காட்டில் வசிக்கிறோமே என்று வருந்தப்போகிறாள்.

மா. என்னால் ஆன்வரையில் நான் கூறியுங் கேட்கவில்லை. நீங்களுந் சற்று கூறிப்பாருங்கள்.

ப. ஸாவித்ரீ! சத்தியவந்தனை மணந்தால் நீயும் அவருடன் இக்காட்டில் கஷ்டங்களை யனுபவிக்க நேருமே. நீயோ

சிறு குழந்தையாயிருக்கிறாய். பிறகு மிகவுங் கஷ்டப்படவேண்டிவருமே. ஆகையால் நன்றாய் யோசிக்கவும்.

ஸா. அம்மணீ! யோசனை ஏன்! சத்தியவந்தரையே மணப்பேன். இல்லையேல் இறப்பேன். இது சத்தியம்.

தவமுனீஸ்வரர் புரோகிதருடன் வருகிறார்.

தவ. மகாராஜா! இதோ புரோகிதரை அழைத்து வந்தேன்.

து. முனிஸ்வரரே! அவரை இப்படியிருக்கச் சொல்லும். குமாரியும் சத்தியவந்தனும் வந்து விட்டார்களா?

தவ. மகாராஜா! அப்படியே செய்விக்கிறேன்.

பு. மகாராஜா! என்னை ஏன் அழைப்பித்தீர்?

து. நமது சத்தியவந்தனுக்கும் அஸ்வபதி மகாராஜர் குமாரத்திக்கும் விவாகம் நடப்பிக்க.

பு. மகாராஜா! இக்காட்டிலா விவாகம் செய்விக்கிறது?

து. அவையெல்லாம் உமக்கு ஏன்? நாங்கள் கூறுவதுபோல் செய்யும்.

பு. மகாராஜா! உத்திரவு.

து. விவாகச் சடங்குகளுக்குத் தேவையானவற்றைச் சேகரஞ் செய்யும்.

பு. எல்லாம் சித்தமாயிருக்கின்றன. எங்கே கல்யாணப்பெண்?

அ. இதோ நிற்கிறாள்.

பு. எங்கே கல்யாணப்பிள்ளை? மறந்து விட்டுப்போகிறோம்.

குமாலியும் சத்தியவந்தனும் வருகிறார்கள்.

சு. இளவரசே! நீர் வேட்டையாடுவதை விட்டுவிட்டு இங்கே என்ன நடக்கிறது பார்த்தீரா!

சத். குமாலி! விளையாடாதே.

து. சத்தியவந்தா! சத்தியவந்தா! இப்படி வருவாய். இதோ பார்த்தனையா! இங்கு வந்திருக்கப்பட்டவர்கள் யார் தெரியுமா? மத்ராபுரி அஸ்வபதிமகாராஜா, அவர் பத்னி மாலவிதேவி, இவர்கள் ஏகபுத்ரி ஸாவித்ரி. ஸாவித்ரி உனக்கு



முன்பே தெரிந்திருக்கலாம். அவள் உன்னையே மணம் புரியப் பிரியப்பட்டுத் தன் தாய்தந்தையரை அழைத்து வந்திருக்கிறாள். உனக்கு அவளை விவாகம் செய்துகொள்ளப் பிரியமா?

சத். உம், உம்.

சு. தந்தையிடம் உம்முடைய அபிப்ராயத்தைக் கூற என்ன தடை?

சத். குமாலீ! சமயாசமயங்கள் தெரிகிறதில்லை. விளையாடாமல் சும்மாயிரு.

சு. மாமன் மாமியர் வந்திருக்கிறார்களென்றோ?

அ. துயுமத்சேன்மகாராஜா! இவர்தானோ உம்புதல்வர்?

து. ஆம். அஸ்வபதிமகாராஜா! விவாகம் செய்விக்கலாமே.

அ. அப்படியே செய்விக்கின்றேன்.

[சத்தியவந்தனும் ஸாவித்ரியும் மாலை மாற்றிக்கொள்ளுகிறார்கள். எல்லோரும் வாழ்த்துகிறார்கள்.]

மங்களம்! மங்களம்!

காட்சி முடிகிறது.

# அங்கம். III.

## காட்சி 1.

இடம் — சாலவபுரிக்கு அடுத்த காடு.

த்யுமத்ஸேனனும் பத்மாவதியும் வருகிறார்கள்.

ப. நாம் நாடு நகரங்கள் எல்லாமிழந்து இக்கொடுங் கானகத்தில் வாழ நேர்ந்ததே!

து. எது வந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும்.

ப. நம்முடன் சத்தியவந்தனுங் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானே!

து. அவனோடு ஸாவித்ரியும் இக்கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள நேர்ந்ததே!

ப. ஸாவித்ரியைப் பார்த்தால் எனக்கு மனவருத்தம் அதிகரிக்கின்றது. அவளோ சிறுபெண். அரண்மனையிலிருந்தால் அநேக சுகத்துடனிருக்கலாமே!

து. யார்விதி யாரைவிட்டது.

ப. சத்தியவந்தன் நம்மை முதலில் இக்காட்டில் பார்த்தபோது ஸாவித்ரியைப்பற்றி நமக்கு ஒன்றுங் கூறவில்லையே!

து. அதைப்பற்றி யிப்போது ஏன் நினைக்கிறாய்.

ப. கூறியிருந்தால்.

து. என்ன செய்வாய்?

ப. நான் என்ன செய்யக்கூடும்?

து. எவை யெவை நடக்கவேண்டுமோ அவையவை நடந்துதான் தீரவேண்டும்.

ப. சத்தியவந்தனெங்கே?

து. சத்தியவந்தன் காய்கனிகளைக் கொண்டுவரப் போயிருக்கிறான்.

ப. அதோ! யாருடைய குரலோ கேட்கிறதே!

து. சத்தியவந்தன் குரல்தான்.

ப. சத்தியவந்தா!



சத்தியவந்தனும் ஸாவித்ரியும் வருகிறார்கள்.

சத். அம்மணீ! ஏன் என்னை அழைத்தீர்?

ப. ஸாவித்ரி எங்கே?

சத். இதோ! ஸாவித்ரி என்னுடன் நிற்கிறாள்.

ப. ஸாவித்ரீ!

ஸா. அம்மணீ!

ப. இன்னேரம் எங்கிருந்தாய்?

சத். அம்மணீ! என்னுடன் இருந்தாள்.

ப. சத்தியவந்தா! ஸாவித்ரி இரண்டு மூன்று தினங்களாக ஆகாரம் எடுத்துக் கொள்கிறதில்லை.

சத். ஸாவித்ரீ! ஏன் அப்படி?

ப. காரணங் கேட்டால் பதில் கூறாமல் ஏதேதோ சாக்கு போக்குகள் சொல்கிறாள். நீதான் அவளை ஆகாரம் எடுத்துக் கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

சத். அப்படியே அம்மணீ! எனக்கு உத்திரவு தரவேண்டும். நான் போய் காய்கனிகளைச் சேகரித்து வருகிறேன்.

ப. சத்தியவந்தா! சீக்கிரம் வந்துவிடு.

ஸா. (தனக்குள்) எனக்குஞ் சத்தியவந்தருக்கும் விவாகமாகிறதற்குமுன், நாரதர் என் தகப்பனாரிடம் அரண்மனையில் வந்திருந்தபோது, என் பிராணபதியின் ஆயுளைப்பற்றிக்கூறின தினம் முதல் நான் ஒவ்வொரு தினமாக எண்ணிக்கொண்டு, நான்கு தினமிருக்கும்போது, என் பிராணபதிக்கும் என் மாமன் மாமிமாருக்குந் தெரியாமல் "த்ரிராத்ரம்" என்னும் விரதமாகிய "கௌரீ" பூஜையை அனுஷ்டித்து வருகிறேன். அந்நாரதர் சொன்னப்பிரகாரம் என் பிராணபதிக்கு இன்றைக்கு என்ன ஆபத்து நேருகிறதோ? இன்று முழுதும் அவரைப் பிரியாமல் அவருடனேயே இருக்கவேண்டும்.

சத். ஸாவித்ரீ! என்ன யோசிக்கிறாய்?

ஸா. பிராணநாதா! நான் என்ன யோசிக்கப்போகிறேன்.

சத். கண்மணீ! ஏன் முகம் வாடி இருக்கிறது?

ஸா. பிராணநாதா! ஒன்றுமில்லை.

சத். இல்லை, இல்லை. உன் மனதிலிருப்பதைக் கூறு.

ஸா. பிராணநாதா! எனக்கு ஒருவரம் வேண்டும்?

சத். கண்மணி! உனக்கென்ன வேண்டும்?

ஸா. இன்று நானுங்களை விட்டுப் பிரியாதவரமே.

சத். அதேன்? இப்படிக்கெல்லாம் கேட்கிறாய்.

ஸா. நான் கேட்கும் வரந் தருகிறீரா இல்லையா.

ச. தந்தேன். என்னுடனேயே யிரு. ஆனால் தாய் தந்தையர்களுக்கு ஆகாரம் எப்படி சேகரிப்பது?

ஸா. பிராணநாதா! இன்று நீர் எங்குசென்றாலும் நான் உடன்வருவேன். எனக்குங் காட்டைப்பார்க்க அதிகப் பிரியமாயிருக்கிறது.

சத். கண்மணி! உன்னால் இக்காட்டில் நடக்கமுடியாது. நீயோ இரண்டு மூன்று தினங்களாக ஆகாரம் எடுத்துக்கொள்கிறதில்லையாம். நீ என்னுடன் எப்படி நடந்து வருவாய்?

ஸா. பிராணநாதா! நான் இக்காட்டைச் சுற்றிப்பார்க்கவேயில்லை. ஆகையால் நானும் உங்களுடன்தான் வருவேன்.

து. ஸாவித்ரி! என்ன!

ப. ஸாவித்ரி! நீயாவது, இக்காட்டில் நடக்கவாவது. போகக்கூடாது.

[சத்தியவந்தன் போகப் புறப்படுகிறான்.]

ஸா. பிராணநாதா! போகவேண்டாம். நானும் வருகிறேன்.

சத். நீ இங்குதானிரு. நான் சீக்கிரம் வருகிறேன். உனக்கு இக்காட்டைக் காட்ட மற்றொரு நாளைக்கு அழைத்துப் போகிறேன்.

ஸா. பிராணநாதா! நான் இன்றுதான் பார்க்கவேண்டும். ஆகையால் என்னையும் அழைத்துப்போம்.

சத். இக்காட்டுப் பாதைகளில் கிரப்ப முள் இருக்கிறது. உன்னால் நடக்கமுடியாது. நீயோ, ஆகாரமில்லாம லிருக்கிறாய்.



ஸா. பிராணநாதா! ஆகாரம் எடுத்துக் கொள்ளாததினாலேயே எனக்கு இளைப்பு தோன்றுது. நான் உங்களுடனேதான் வருவேன். நீர் எனக்குக் கொடுத்த வரத்தை மறந்து விட்டீரோ?

சத். ஆனால் என் தாய்தந்தையர் அனுமதி பெற்றுவரவேண்டும்.

ஸா. பிராணநாதா! நீர்தான் அவர்கள் உத்திரவு பெற்று, என்னை அழைத்துப்போகவேண்டும்.

சத். தாய் தந்தையர்களே! ஸாவித்ரியும் என்னுடன் வர உத்திரவளியுங்கள். நான் அவளுக்கு இக்காட்டை சுற்றிக் காட்டிக் காய் கனிகளைச் சேகரித்துக்கொண்டு சீக்கிரம் வருகிறேன்.

து. சத்தியவந்தா! அப்படியே செய்.

ப. சத்தியவந்தா! ஸாவித்ரிக்கு இக்காட்டை சீக்கிரம் காட்டி, அழைத்து வருவாய்.

(சத்தியவந்தனும் ஸாவித்ரியும் போகிறார்கள்.)

காட்சி முடிகிறது.

# அங்கம். III.

---

## காட்சி. 2.

இடம்.—இயமதர்மராஜன் கொலுமண்டபம்.

இயமதர்மராஜா தூதர்களுடன் வருகிறார்.

இய. எங்கே சித்திராபுத்திரன்?

தூ. அவரின்னும் கொலுமண்டபத்திற்கு வரவில்லை.

இய. உங்களில் ஒருவன் போய் அவனை அழைத்து வாருங்கள்.

[தூதன் போகிறான்.]

இய. தூதர்காள்! பூலோகத்தில் எல்லோரும் நம் பாசத்திற்கஞ்சி நடக்கிறார்களா?

தூ. அதற்கு என்ன தடை?

இய. தூதர்காள்! நீங்கள் உங்கள் வேலைகளைச் சரிவர பார்த்து வருகிறீர்களா?

தூ. சுவாமீ! தாங்கள் காலாலிட்ட வேலையை நாங்கள் தலையால் தடையின்றிச் செய்துவருகிறோம்.

இய. தூதர்காள்! எளியோரையும், தாய்தந்தையரை வதை செய்கிறவரையும், பிறர் திரவியங்களைத் துரோக சிந்தையால் அபகரிப்பவர்களையும், அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடு பவரையும், இன்னும் இப்படிப்பட்ட துஷ்காரியங்களைச் செய்யுஞ் சண்டாளரையும் என்முன் கொண்டுவாருங்கள். நான் அவர்களுக்குத் தக்க தண்டனை செய்விக்கவேண்டும்.

தூ. சுவாமீ! அப்படிப்பட்ட துற்காரியங்களைச்செய்யும் சண் டாளர்கள் எங்களுக்கு எப்படித் தெரியும்? கணக்க ரைக் கேட்டால் தெரியவரும்.

இ. தூதர்காள்! சித்திராபுத்திரன் இன்னும் வரவில்லையா?



சித்திரா புத்திரனும் தூதனும் வருகிறார்கள்.

தூ. சுவாமீ இதோ புத்தகங்களை எடுத்துக் கொண்டு சித்திரா புத்திரர் வந்திருக்கிறார்.

இய. ஓ! சித்திராபுத்திரரே! இப்படி உட்காரும்.

சி. சுவாமீ! கட்டளை.

இய. தூதர் சொல்வதைக் கேட்டாயோ?

சி. இப்போது அப்படிப்பட்ட சண்டாளர் இங்கு எவருமில்லை. ஆனால் சிலருக்கு இன்னும் தண்டனை விதிக்கப் படவில்லை. அவர்களை வரவழைக்க உத்திரவாகவேண்டும்.

இய. சீக்கிரம் வரவழை.

சி. தூதா! நான் பெயரிட்டு அழைக்கும்போது, அவர்களை நம்மரசர் முன் ஒவ்வொருவராகக் கொண்டுவர வேண்டும்.

தூ. உத்தரவு.

சி. நெடுக்க வளர்ந்தான்! (தூதன் போகிறான்.)

தூ. இதோ அழைத்து வந்தேன்.

இய. சித்திராபுத்திரா! இவன் பூலோகத்திலிருக்கப்பட்டவனல் லவா? இவன் அங்கு என்ன செய்திருக்கிறான்?

சி. சுவாமீ! தாசிகள் வீடே இவனுக்கு இருப்பிடம். இவன் எப் பொழுதும் இரண்டு, மூன்று தாசிகளுடன் கூடியிருப்பான். தாசிகள் வீட்டில் எந்தக் காரியங்கள் நடந்தாலும் இவன் முற்றாம்பூலம் வாங்கப்பட்டவன். இவனுக்கு விவாக மாகியும் மனைவியிடம் பிரியமில்லாதவன். இவன் தாசிகளு டன் பலக்ஷேத்திரங்களுக்குப் போய் மூர்த்தி தரிசனஞ் செய்தவன். இதுவே இவன் செய்த நற்காரியம்.

இய. ஹா! ஹா! அப்படியா! இப்போது இவனைப் பத்து வருஷ காலம் நரகத்திலிருக்கச் செய்யுங்கள்.

[தூதர்கள் இழுத்துப் போகிறார்கள்.]

சி. குடிக்கப் பெருத்தான். [தூதன் போகிறான்.]

தூ. இதோ! அழைத்து வந்தேன்.

சி. சுவாமீ! இவன் அதிகமாய்க் குடித்துக் குறுக்கே பெருத் திருக்கிறான். இவன் குடிப்பது இவ்வளவு அவ்வளவென்று

சொல்லி முடியாது. இவன் குடிப்பதற்கே எல்லா சொத்துகளையும் அழித்தவன்.

இய. இப்பாதனுக்குத் தக்கதண்டனை யிதுதான். இவன் பூலோகத்தில் கள் முதலியன எப்படி குடித்திருந்தானோ, அப்படியே நம் நாட்டிலும் இவனை இரும்பைக் காய்ச்சி யுருக்கி குடிக்கச் செய்யுங்கள்.

[தூதர்கள் இழுத்துக்கொண்டு போகிறார்கள்.]

சி. தின்னைத்தூங்கி! [தூதன் போகிறான்.]

தூ. இதோ! அழைத்து வந்தேன்.

இய. இவன் எப்படிப்பட்டவன்?

சி. இவன் பெரும்பாதகன். இவன் தகப்பனுக்கு இரண்டு தாரம். இவன் முதல்தாரப்புத்திரன். முதல் தாரம் தப்பிப் போய்விட்டது. பிறகு இவன் தகப்பன் இரண்டாந் தாரம் விவாகஞ் செய்துகொண்டான். அவளை இப்பாதகன் பெண்டாகக் கொண்டான்.

இய. ஹா! பாதகா! இப்படியுஞ் செய்வாயோ? நீ எப்போதும் நரகத்திலேயே துன்பப்பட்டிருக்கக் கடவாய்.

[தூதர்கள் இழுத்துக்கொண்டு போகிறார்கள்.]

சி. உண்டு வளர்ந்தான். [தூதன் போகிறான்.]

தூ. சுவாமீ! இதோ அழைத்து வந்தேன்.

இய. சித்ரபுத்திரா! இவன் என்ன செய்திருக்கிறான்?

சி. ஸ்வாமீ! இவனுக்கு ஊரார் உடைமையை உண்பதும், வெட்கமின்றி எப்போதும் உறங்குவதுமே வேலை. இவன் தாய் தந்தையர்களை வதைத்த பாதகன். அவர்களோ! மிக சத்திய வந்தர்கள். அவர்களுக்கு இவன் பிள்ளையாகப் பிறந்து அவர் செய்யப்புகும் நற்காரியங்கட்கெல்லாம் தடைசெய்பவன். அவர்களை வீட்டைவிட்டுத் துரத்திய பாவி.

இய. அடே! அவனைக் கொண்டுபோய் புழுக்கள் துளைக்கும் இடத்தில் விட்டுவிடுங்கள்.

தூ. அப்படியே சுவாமீ!

(தூதன் இழுத்துக்கொண்டு போகிறான்.)



இய. பின்பு.

சி. வேஷதாரி! [தூதன்போகிறான்]

தூ. சுவாமீ! இதோ இழுத்து வந்தேன்.

சி. இவனை எந்த ஆலய உற்சவாதிகளிலும் பார்க்கலாம். விஷ்ணுவாலயமானால் நாமம் துளசிமாலையும், சிவாலயமானால் விபூதி ருத்திராக்ஷங்களையும் அணிந்துகொண்டும், பாட்டுகளைப் பாடிக்கொண்டு மிருக்கப்பட்டவன். திருவிழாக்களில் திருடுவதும், குழந்தைகளின் கை, கால், கழுத்துகளில் அணிந்திருக்கப்பட்ட நகைகளை யபகரிப்பதுமன்றி, அவர்களைக்கொன்று கிணறு குளம் தடாகம் ஏரிகளில் போட்டு விடுவதுமே இவன் தொழில்.

இய. ஹா! அப்படியா! இவன் கால்விரலில் [illegible] கட்டி உடலெல்லாம் ஒன்றாகும்படி யிருக்கி[illegible] பிடிக்கப்படு மிடத்துக்குக் கொண்டுபோ[illegible]விடுங்கள்.

[தூதன் போகிறான்.]

சி. குரூரன்.

தூ. சுவாமீ! இதோ! இழுத்து வந்தேன்.

இய. இவன் என்ன செய்திருக்கிறான்?

சி. இவனோ! கடன் வலியக்கொடுத்து பின் அக்கடன்காரர்களை நிர்பந்திக்கப்பட்டவன். யார் கேட்டாலும் கடன் கொடுப்பான். வட்டியோ கேழ்க்க வேண்டியதே யில்லை. சதா பொய் சாக்ஷிகளை ஏற்படுத்திக்கொண்டு, [illegible]வியாச்சியங்கள் தாவாசெய்து, முதலும், முதலுக்கு அதிகமான வட்டியும், வட்டிக்கு வட்டியுமாக வசூலிப்பதோடு, அதின் நிமித்தம் வாரண்டுகொண்டு கடன்காரர்களைக் கைதி செய்விப்பதும், ஏழைகள் வீட்டுக் குடும்ப சாமான்களை எடுப்பித்து தெருவில்போடுவது முதலானவைகளே இவன் தொழில்.

இய. இவனை உதிரம் சொரியும்படிச் செய்வதாகிய நரகத்தில் கொண்டு விட்டு வாருங்கள்.

தூ. உத்தரவு சுவாமி. [தூதன் இழுத்துக்கொண்டு போகிறான்.]

இய. சித்திராபுத்திரா! இன்று எவ்வெவர்களை நமது பட்டணத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

சீ. ஸ்வாமீ! இதோ கணக்கைப்பார்த்துக் கூறுகிறேன்.

தூ. சீக்கிரங் கூறுவாய்.

சி. அ, ஆ. அம்பட்டர் கணக்கு.
இ, ஈ. இடையர் கணக்கு.
உ, ஊ. உழுவர் கணக்கு.
எ, ஏ. எருதுகள் கணக்கு.
ஒ, ஓ. ஓச்சர் கணக்கு.
க, கா. கணக்கர் கணக்கு.
ச, சா. சத்தியவந்தன் கணக்கு.
சுவாமீ! சத்தியவந்தன் இன்று நம் பட்டணம் வரவேண்டியவனு யிருக்கிறான்.

இய. தூதர்காள்!

தூ. சுவாமீ!

இய. பூலோகத்துக்கு இருவர் போய் சத்தியவந்தன் உயிரைக் கவர்ந்து வாருங்கள்.

தூ. சுவாமீ! கட்டளை. [இரண்டு தூதர்கள் போகிறார்கள்.]

ஒரு தூதன் ஓடிவருகிறான்.

இய. ஏன் ஓடிவருகிறாய்! என்ன?

தூ. சுவாமீ! நாரதமுனிவர் வந்திருக்கிறார்.

இய. இப்போது ஏன் வந்தார்? சமயாசமயந் தெரிகிறதில்லை. வரச்சொல். [தூதன் போகிறான்.]

[நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.]

இய. நாரதரே! வாரும்.

நா. கல்யாண்! கல்யாண்!

இய. இவ்வாசனத்தில் வீற்றிரும்.

நா. தாங்களும் உட்கார வேண்டும்.

இய. எங்கிருந்து வருகிறீர்?

நா. பூலோகத்திலிருந்து.

இய. அங்கு என்ன அதிசயம் கண்டீர்?

நா. ஒன்றுமில்லை.

இய. எங்கு போகிறீர்?

நா. பிரம லோகத்துக்கு.

இய. ஏன்?

நா. பிரம்மாவைப்பார்க்க.



இய. எதற்காக?

நா. பார்த்து அதிக நாளாயிற்றென்று.

இய. தாங்கள் ஏது இப்போது இங்கு வந்தது?

நா. தங்களைப்பார்த்துப் போகலாமென்றே.

இய. சில நாட்களுக்கு முந்திதானே என்னைப்பார்த்தீர். மறந்துவிட்டீர் போலும். ஏதோ வேலையாக வந்திருப்பீர்.

நா. இல்லை, இல்லை.

இய. ஏன் மறைக்கிறீர்? கூறும்.

நா. பூலோகத்தில் த்யுமத்சேன மகாராஜன் ஏகபுத்திரன் சத்தியவந்தனுக்கும், அஸ்வபதி மகாராஜன் ஏகபுத்திரி ஸாவித்ரிக்கும் விவாகம் நடந்தது. இன்றைக்கு ஒருவருடங்கூட ஆகவில்லை. இன்றோடு அவனுக்காயுசு முடிவென்று தெரிந்துகொண்ட ஸாவித்ரி புலம்பிக் கொண்டிருக்கிறாள். நான் பரிதாபப்பட்டு இது விஷயமாய் தங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்.

இய. நான் என்ன செய்யக்கூடும்?

நா. இன்னம் சிறிது காலம் சத்தியவந்தனை ஸாவித்ரியுடன் இருக்கும்படிச் செய்யவேண்டும்.

இய. அது என்ன?

நா. நீர் சத்தியவந்தன் உயிரை யிதற்குள் கவராதிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இய. என்னை நீதி தவறியா நடக்கச்சொல்லுகிறீர். அது ஒருகாலும் முடியவே முடியாது. இதற்குத்தானோ வந்தீர்?

நா. உங்களால் சத்தியவந்தனைச் சிறதுகாலம் பிழைப்பித்திருக்கும்படிச் செய்ய முடியாதா?

இய. அதைப்பற்றி மறுபடியும் கேளாதீர்.

நா. ஆனால் நான் போகட்டுமா?

இய. சுகமாய்ப் போகலாம்.

நா. கல்யாண்! கல்யாண்! [போகிறார்.]

பூலோகத்துக்கு சத்தியவந்தனைக் கொண்டுவரப் போன தூதர்கள் திரும்பி வருகிறார்கள்.

இய. தூதர்காள்! சத்தியவந்தனைக் கவர்ந்து வந்தீர்களா?

தூ. ஸ்வாமீ! அச்சத்தியவந்தனைக் காட்டில் கண்டுபிடித்தோம். அவன் மனைவி அவனருகிலிருந்து புலம்பிக் கொண்டிருக்கிறாள்! எங்களால் நெருங்கமுடியவில்லை. அக்னிச் சுவாலை யதிகமாய் வீசுகின்றது. நாங்கள் எவ்வளவு முயற்சித்தும் முடியவில்லை. தங்களிடங் கூறவந்தோம்.

இய. தூதர்காள்! என்ன ஆச்சரியம்? இருக்கட்டும். நான் ஒருகை பார்க்கிறேன். நானே இப்போதே அவனைக் கொண்டு வருகிறேன். என் வாகனத்தைச் சித்தஞ் செய்யுங்கள்.

தூ. இதோ! கொண்டுவந்தோம்.

இய. தூதர்காள்! ஏராளமா?

தூ. தடையின்றி.

இய. என் வாகனம் நடக்கவே யில்லையே. வேறொன்றைக் கொண்டு வாருங்கள்.

தூ. ஸ்வாமீ. நமது வாகனங்கள் ஒன்றுக்கொன்று இளைத்தன வல்ல. வேறொன்றைக் கொண்டு வந்தாலும் பிரயோசனமில்லை. அச்சத்தியவந்தன், சத்தியம், தர்மம், ஒழுக்கம், வீரம் முதலிய எல்லா சற்குணங்களையுமுடையவன். அவன் மனைவியோ, கற்பு, சீலம், நெறி முதலிய ஸ்திரீகளுக்குரிய சகல நற்குணங்களையுமுடையவள். ஆகையால்தான் நமது வாகனம் அசையவில்லை போலும்.

இய. ஹா! ஹா! அப்படியா! எப்படிப்பட்டவர்களும் நம் வலையில் அகப்படாமற் போகாரே. நீங்கள் எல்லோரும் இங்கே இருங்கள். வாகனமும் வேண்டாம். நான் தனியே போய் தக்கயோசனையுடன் அவன் உயிரைக் கவர்ந்து வருகிறேன். எங்கே பாசக்கயிறு?

தூ. ஸ்வாமீ! அங்கேயே போட்டு வந்திருக்கிறோம்.

ய. நீங்கள் யாரும் வரவேண்டாம். நான் போய் எடுத்துக் கொள்ளுகிறேன். [போகிறான்.]

காட்சி முடிகிறது.

# அங்கம். III.

## காட்சி 3.

இடம்: பிரம்மா கொலுமண்டபம்.

பிரம்மா ஸிம்மாசனத்திலிருக்கிறார், நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.

பி. நாரதரே! வாரும்.

நா. கல்யாண்! கல்யாண்!

பி. இவ்வாசனத்தில் உட்காரும்.

நா. ஹா! ஹா! அப்படியே.

பி. எங்கிருந்து வருகிறீர்?

நா. பூலோகத்திலிருந்து.

பி. அங்கு என்ன விசேஷம் கண்டீர்?

நா. ஒன்றுமில்லை.

பி. போயிருந்த விடத்தில் ஒன்றும் பார்க்கவில்லையென்று ஏன் மறைக்கிறீர்? ஏதோ கண்டு வந்திருப்பீர். கூறும்.

நா. பூலோகத்தில் த்யுமத்சேன மகாராஜனுடைய ஏகபுத்திரன் சத்தியவந்தனுக்கும், அஸ்வபதி மகாராஜன் ஏகபுத்ரி ஸாவித்ரிக்கும் விவாகமாயிருக்கிறது.

பி. அது முன்பே எனக்குத் தெரியுமே!

நா. ஒரு வருஷங்கூட ஆகவில்லை.

பி. ஆனால் என்ன?

நா. இன்றைக்கு அவன் ஆயுள் முடிவென்று அவன் மனைவி ஸாவித்ரிக்கு எப்படியோ தெரிந்திருக்கின்றது.

பி. அது உம்மால் தெரிந்திருக்கலாம்.

நா. என்னால் எப்படி?

பி. நீர் கூறியிருக்கலாம்.

நா. நானாவது ஸாவித்ரிக்கு கூறுவதாவது.

பி. ஸாவித்ரியிடம் நேராகக் கூறியிருக்க மாட்டீர்.

நா. பின் எப்படி கூறியிருப்பேன் என்கிறீர்?

பி. அது உங்களுக்குத்தான் தெரியும்.

நா. எனக்கு இது நானுவேலை ?

பி. உங்கள் வேலைதான் தெரியுமே.

நா. அது என்ன ?

பி. கலகஞ் செய்துக்கொண்டிருப்பது.

நா. என்னைக் கலக்ககாரனென்கிறீரோ ?

பி. கோபித்துக் கொள்ளாதீர். காரியப்படிப் பேசிக்கொண்டிருந்தால் நீர் சங்கதிகளைக் கூறாமல் விட்டுவிட்டுப் போகிறீர்.

நா. நான் ஏன் தங்கள் பேரில் கோபிக்கப் போகிறேன் ?

பி. ஸாவித்ரிக்குத் தெரிந்து என்ன செய்கிறாள் ?

நா. புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

பி. எங்கே ?

நா. காட்டில்.

பி. எக்காட்டில் ?

நா. சாலவபுரிக் கடுத்த காட்டில்.

பி. ஸாவித்ரி அக்காட்டில் ஏன் இருக்கிறாள் ?

நா. அவள் புருஷன் சத்தியவந்தனும், அவன் தாய்தந்தைகளும் கண்களை யிழக்கப்பெற்று அக்காட்டிலிருப்பதால் ஸாவித்ரியும் அவர்களுடனிருக்க நேர்ந்தது.

பி. சத்தியவந்தனுடைய தாய்தந்தையர் ஏன் அக்காட்டில் இருக்கிறார்கள் ?

நா. கடகேது துயுமத்சேன மகாராஜன்மீது படையெடுத்து வந்து அவன் நாடுநகரங்களை யபகரித்ததுமன்றி, அவனையும், அவன் மனைவியையுங் கண்களைக் குத்திக் காட்டில் விடச் செய்தான்.

பி. ஹா ! பாதகன் !

நா. அவர்களைப் பார்க்கப் பரிதாபமாக விருக்கிறது.

பி. எனக்கு அவர்களைப்பற்றிக் கேட்கும்போதே பரிதாபமா யிருக்கிறதே !

நா. தாங்கள்தான் அவர்களை அந்நிலையினின்று நீக்கவேண்டும்.

பி. என்னால் என்ன செய்யமுடியும் ?



ஸாவித்ரி படுந்துயரத்தைப் பார்க்க எவர் மனமுஞ் சகியாதே. தாங்கள்தான் காக்கவேண்டும்.

பி. என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர் ?

நா. சத்தியவந்தன் இன்னுஞ் சிலகாலத்திற்கு இப்பூலோகத்தில் தன் தாய் தந்தையுடனும், ஸாவித்ரியுடனும் வாழும்படிச் செய்விக்க வேண்டும்.

பி. சத்தியவந்தன் பிறக்கும் பொழுதே அவன் ஆயுளை நியமித்து எழுதிவிட்டேனே ! இப்போது அதை என்னால் மாற்ற முடியுமோ ?

நா. முடியாதுதான், எப்படியாவது இவ்விஷயத்தில் அவர்களைக் காப்பாற்றித்தான் ஆகவேண்டும்.

பி. இயமதர்மராஜாவையே கேட்டு அச்சத்தியவந்தனைப் பிழைப்பிக்கிறது தானே ?

நா. தாங்களிருக்கதான் எதற்காக இயமதர்மராஜாவிடத்திற்குப் போகிறது ? நீர்தான் அதை முடித்துத் தரவேண்டும்.

பி. இயமதர்மராஜா இல்லாது இவ்வேலை முடியாது. அவனே நெறிதவறாதவன். நம்முடைய எத்தனமோ நிறைவேறவேண்டும். ஆகையால் எனக்கொரு யுக்தி தோன்றுகின்றது.

நா. அது என்ன ?

பி. கருணாதேவியைக் கொண்டு அவ்வேலையை முடிக்கலாமென்று.

நா. உங்களுக்கு எது யுக்தமோ அதைச் செய்துக் காரியத்தை முடிக்கவேண்டும்.

பி. யாரடா அது ?

சே. சுவாமீ !

பி. கருணாதேவியை நான் அழைத்துவரச் சொன்னதாகக்கூறிச் சீக்கிரம் அழைத்துவா.

சே. ஸ்வாமீ! கட்டளை [போகிறான்.]

கருணாதேவி பாடிக்கொண்டு வருகிறாள்

க. ஸ்வாமீ! நமஸ்காரம்.

பி. கருணா! இந்நாரதரிடம் நான் சத்தியவந்தனைப் பிழைப்பித்துக் கொடுப்பதாய் வாக்களித்து விட்டேன். நானதைத் தவறக் கூடாது. இயமதர்மராஜனோ யார் தடுத்தாலும் தன் வேலையை முடிக்காது விடான். தர்மசங்கடமாயிருக்கிறது. நீ இன்று முதல் எப்போதும் இயமதர்மராஜனுக்குத் தெரியாமல் அவனுடனிருந்து அச்சத்தியவந்தனுடைய உயிரைக் கவரச் செய்யாமல் காப்பாற்ற வேண்டியது உன் கடமை.

க. ஸ்வாமீ! கட்டளைப்படி நடந்து கொள்ளுகிறேன்.

பி. கருணா! தாமதியாமற் போ. (போகிறாள்.)

நா. நான் வந்த வேலை முடிந்தது. நான் போகட்டுமா?

பி. நீர் சுகமாய்ப் போய் வரலாம்.

நா. கல்யாண்! கல்யாண்! [பாடிக்கொண்டு போகிறார்.]

காட்சி முடிகிறது.

# அங்கம். III.

## காட்சி 4.

இடம்.—சாலவபுரியை அடுத்தகாடு.

சத்தியவந்தனும் ஸாவித்ரியும் வருகிறார்கள்.

சத். காந்தாமணீ! அந்த நந்தவனத்தில் நீ என்னைப் பார்த்த பார்வையை யென்னென்றுரைப்பேன்! மறக்கலாமென்றாலும் முடியவில்லையே!

ஸா. பிராணநாதா! அதை ஏன் இப்போது நினைக்கிறீர்?

சத். கண்மணீ! அதிருக்கட்டும். எனக்கொரு முத்தம் கொடு. [முத்தம் கொடுக்கிறாள்.]

ஸா. (தனக்குள்) நாரதமகாமுனிவர் குறிப்பிட்ட தினம் இன்றாயிற்றே. என் பிராணபதிக்கு இன்று என்ன ஆபத்து வரப் போகிறதோ தெரியவில்லையே. இன்று தன் ஆயுள் முடிகிற தினமென்று தெரிந்திருந்தால் என்னை முத்தமிடக் கேட்பாரா? முத்தமிடுவாரா?

சத். ஸாவித்ரீ! ஸாவித்ரீ! எங்கு சென்றாய்?

ஸா. பிராணகாந்தா! நான் தங்களைவிட்டு எங்கு போகப்போகிறேன். அவ்விருக்ஷத்தைப் பார்த்துவந்தேன்.

சத். கண்மணீ! இப்படி உட்காரலாமா?

ஸா. பிராணபதீ! என்னை ஏளனம் செய்கிறீரோ? தாங்கள் இக்காட்டில் நடந்து வந்த களைப்பால் இங்கு உட்காரலாமா வென்கிறீரோ!

சத். கண்மணீ! இல்லை, இல்லை; உனக்கு எங்கு சிரமமாயிருக்கிறதோ என்று கூறினேன்.

ஸா. பிராணகாந்தா! தாங்கள் உட்காருகிறதா யிருந்தால் நானும் உட்காருகிறேன். [உட்காருகிறார்கள்.]

சத். காந்தாமணீ! நான் உன்னை ஒன்று கேட்கவேண்டுமென்றிருந்தேன். இதுதான் அதற்குத்தகுந்த சமயம்.

ஸா. என்ன!

சத். கண்மணி! பயப்படாமல் கூறுவையா?

ஸா. பிராணநாதா! தங்களிடங்கூற எனக்கு என்ன பயம்?

சத். காதலி! நீ ஏன் இரண்டு, மூன்று தினங்களாக உபவாசமிருக்கிறாய்?

ஸா. (தனக்குள்) ஏது! காரணங் கூறாமல் விடமாட்டார். பொய்யுரைக்கவும் நாவெழவில்லை. நாரதர் கூறினதையும் என் வாயால் கூறவுஞ் சாத்தியப் படவில்லை. நான் என்ன செய்கிறது! ஜகதீசா! என்ன கூறுவது?

சத். என்ன யோசிக்கிறாய்?

ஸா. ஒன்றுமில்லை.

சத். நான் கேட்டதற்கு ஏன் பதில் கூறவில்லை?

ஸா. பிராணநாதா! நமக்கு விவாகம் இக்காட்டில் நடந்தது. நியாயமாய் என் தகப்பனார் வீட்டில் நடக்க வேண்டியது. காட்டில் நடந்ததினால் வீட்டில் நடக்கவேண்டிய சடங்குகள் சில நின்றன. எங்கள் வம்சத்தில் பெண்களுக்கு விவாகமாகிறதற்கு முன்பு கௌரீ பூஜை செய்வித்துப் பிறகுதான் விவாகஞ் செய்விக்கிறது. எனக்கு விவாகமாகும்போது அப்பூஜை நடத்தவில்லை. என் தாய்தந்தையர்கள் ஊருக்குப் புறப்படும்போது அப்பூஜையை ஒருவருஷத்திற்குள் நடப்பிக்கும்படிக் கட்டளையிட்டுப் போயினர். இப்பொழுது அப்பூஜை செய்துக்கொண்டு வருகிறேன். ஆகையால் இரண்டு மூன்று தினங்களாக உபவாசமிருக்கிறேன்.

சத். காந்தாமணி! என் தாய் தந்தைகளிடத்தில் கூறியிருந்தால் அவர்கள் வருத்தப்படாமலிருப்பார்களே. என்னிடம் உன்னைப்பற்றி என்ன விசித்திரமாய்க் கூறினார்கள். முன்பே கூறியிருந்தால் அவ்விரதத்தை விமரிசையாய் நடத்தியிருக்கலாமே.

ஸா. நாதா! ஏன் என்மேல் கோபிக்கிறீர்! ஏதோ தெரியாமையாலும், நாம் இக்காட்டில் கஷ்டப்படுவதையும் அநுசரித்து கூறவில்லை. மன்னிக்கவும்.

சத். கண்மணி! இனி இம்மாதிரியான காரியங்கள் செய்யாதே. எதுவாயிருந்தாலும் எங்களிடங் கூறு. நாங்கள் அதற்குத் தக்கப்படி நடந்துக் கொள்ளுகிறோம்.



ஸா. நாதா! மாமா, மாமி அவர்களிடங் கூற லஜ்ஜையாயிருந்தது.

சத். கண்மணி! என்னிடத்திலுங் கூறுவதற்கு லஜ்ஜையோ?

ஸா. இல்லை, இல்லை, நாதா! இனி எதையும் நான் தங்களிடங் கூறி பின்செய்கிறேன்.

சத். ஸாவித்ரீ! எனக்கு அதிக தாகமாயிருக்கிறது. நான் இக்குளத்திற்குப்போய் ஜலங் குடித்து வருகிறேன்.

ஸா. பிராணகாந்தா! நான் போய் ஜலம் கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்.

சத். காந்தமணி! நீ இங்கேயே இரு. நான்போய் ஜலம் குடித்துச் சீக்கிரம் வருகிறேன்.

ஸா. நாதா! நீர் அக்குளத்தருகே போவதானால் நானும் உம்முடன் வருகிறேன்.

சத். கண்மணீ! எனக்கு உடம்பு ஏதோ ஒரு விதமாயிருக்கிறது.

ஸா. நாதா! அதிக தாகத்தால் இருக்கலாம். என் மடிமீது சற்று படுத்துக் களைதீர்த்துக் கொள்ளும்.

சத். கண்மணீ! என்கைகால்களை யசைக்க முடியவில்லையே. நாவோ வரண்டு போகின்றது. பேசவும் நாவெழவில்லையே! ஸாவித்ரீ! ஸாவித்ரீ!

[ஸாவித்ரி தன்மடிமீது படுக்க வைத்துக் கொள்கிறாள்.]

ஸா. ஜகதீசா! என் பிராணபதிக்கு இன்று என்ன ஆபத்து நேருமோ வென்று என்னை அவரைப் பிரியாமல் அவருடன் வந்தது நற்காலமே. இல்லாவிடில், நான் என் மாமன் மாமிகளுடனிருக்க இவர் தனியாக வந்திருந்தால் என்ன அவஸ்தைப் படுவாரோ?

சத். ஐயையோ! ஐயையோ! யாரோ இருவர் என்னைக்கட்டக் கயிறு கொண்டு வருகிறார்களே.

ஸா. பிராணகாந்தா! ஏன் பயப்படுகிறீர்? இங்கே யாரும் வரவில்லையே.

[தன் பிராணபதிக்கு நேர்ந்திருக்கும் கோர மரணம் ஸாவித்ரி கடவுளை ஸ்தோத்திரம் செய்கிறாள்.]

இயமதூதர்கள் இருவர் வருகிறார்கள்.

தூ. 1. அண்ணா! அதோ! யாரோ, இருவர் இருக்கிறார்கள். அவர்களில் படுத்திருப்பவனா சத்தியவந்தன்?

தூ. 2. தம்பி! படுத்திருப்பவன்தான் சத்தியவந்தன். அவன் மனைவி அவனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறாள். ஆகையால் நாம் சந்தடிச் செய்யாமல் மெல்லப் பதுங்கி அவன் உயிரைக் கவர்ந்துப் போகலாம்.

தூ. 1. ஆம், ஆம். அப்படித்தான் செய்வோம். போகலாம் வா.

தூ. 2. தம்பி! ஹா! அந்தப்பெண்மணி என்ன பரிதாபத்தோடு தன் பிராண பதியைக்குறித்துச் சுவாமியை ஸ்தோத்திரம் செய்கிறாள்?

தூ. 1. அண்ணா! நாமிதை பார்த்திருந்தால் வந்தவேலை எப்படி முடியும்? சீக்கிரம் அவன் உயிரைக்கவர்ந்துப்போவோம் வா.

[சத்தியவந்தனருகில் போகிறார்கள்.]

தூ. 2. தம்பி! என்பேரில் அனல் வீசுகின்றது. நெருங்கக் கூடவில்லையே! என்ன!

தூ. 1. அண்ணா! அன்றோ! என்றாலும் நெருங்கமுடியவில்லை. என்ன செய்கிறது!

தூ. 2. தம்பி! அனல்வீசக் காரணம் அச்சத்தியவந்தன் மனைவியின் கற்பின் மகிமையாயிருக்கலாம். அவளோ ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிறாள். நாம் நம் வல்லமையைக் காட்டலா மென்றால் அவ்வனலுக் கிரையாகி விடுவோம். மேலும் அம்மாது நம்மை சபித்திடுவாள் போலும் பயமாயிருக்கிறது. நாம் திரும்பி நம்மரசனிடஞ் சென்று தெரிவிப்போம். அவர் ஆக்ஞைப்படி நடந்துகொள்வோம்.

தூ. 1. ஆம், ஆம். அதுதான் சரி. நாம் வந்தவழியைப் பார்த்து திரும்பிப் போகலாம். [போகிறார்கள்.]

ஸா. பிராணநாதா! உங்களுக்கிப்போது உடம்பு எப்படியிருக்கிறது?

சத். ஸாவித்ரீ! எனக்கு எழுந்து உட்கார முடியவில்லையே! பேசவும் நாவெழ வில்லையே!



ஸா. ஜகதீசா! [ஸ்தோத்திரம் செய்கிறாள்.]

இயமதர்மராஜர் வருகிறார்.

ஸா. ஐயா! நீர் யார்? தாங்கள் இங்கு வந்தகாரண மென்ன?

இய. (தனக்குள்) இதுவரையில் இப்பூலோகத்தார் என்னையாவது, என் தூதரையாவது கண்டுப் பிடித்தவர்கள் எவரு மில்லை. இம்மாதோ! என்னைப்பார்த்து, நீ யாரென்று கேட்கிறாள். இவள் கற்பே காரணமா யிருக்கலாம். இவளுடன் பேசிப் பார்ப்போம் (ஸாவித்ரியைப் பார்த்து) மாதே! நான்தான் தென் திசையாளும் இயமன். உன் பதிக்கு ஆயுள் முடிவாகி விட்டபடியால் அவனுயிரைக் கவர்ந்துப்போக வந்தேன்.

ஸா. தூதர்களை அனுப்பாது, நேரில் தாமே இப்பூலோகத்துக்கு வந்ததேன்?

இய. தூதரை முன் அனுப்பினேன். அவர்கள் உன் பதியின் உயிரைக் கவர்ந்துவர முடியாததால் நானே வரவேண்டியதாயிற்று.

ஸா. என் பதியின் உயிருடன் என்னுயிரையுங் கவர்ந்துபோம்.

இய. மாதே! நீ கூற வேண்டிய அவசியமில்லை. உன் ஆயுள் முடிவில் தடையின்றி உன் உயிரைக் கவர்ந்துபோவேன். அப்போது எவர் தடைசெய்தாலும் விடுவேனோ! இப்போது உன் உயிரை உன்பதியின் உயிருடன் கவர்ந்துபோவது நியாயமில்லை.

[இயமன் சத்தியவந்தனுயிரைக் கவர்ந்து போகிறான். ஸாவித்ரியும் பின்தொடர்ந்து போகிறாள்.]

காட்சி முடிகிறது.

# அங்கம். III.

## காட்சி 5.

இடம்: இயமதர்மராஜன் அரண்மனை.

இயமதர்மராஜன் வருகிறான். ஸாவித்ரியும் பின்தொடர்ந்து வருகிறாள்.

இய. (திரும்பிப் பார்த்து) மாதே! நீ எப்படி அக்கினியாறு முதலிய கடும் பாகங்களை கடந்து என்னுடன் வந்தாய்? நீ திரும்பிச் சென்று உன் பதிக்குச் செய்யவேண்டிய கிருத்யங்களைச் செய். என் பின் வராதே, போ.

ஸா. என் பதியை எங்கு கொண்டு போகிறீரோ அங்கு நானும் வருவேன். இதுதான் ஸ்திரீகளுக்குரிய தர்மம். பெரியோரிடத்தில் வைத்த பக்தியாலும், பதியினிடத்து வைத்த அன்பினாலும், செய்துமுடித்த விரதத்தாலும் நான் எங்கு போகிறதற்குந் தடையிராதென்று நம்புகிறேன். எல்லாவற்றிலுந் தர்மமே சிறந்தது என்றுகூறக் கேட்டிருக்கிறேன். அத்தர்மத்தைக் கைக்கொண்டவரான நீர் என்னையும், என் பர்த்தாவையும் பிரிப்பது தகுதியோ?

இய. நீ கூறுந் தர்மசாஸ்திரங்களைக் கேட்கக்கேட்க உன்னிடத்தில் எனக்கு அன்புதிக்கின்றது. சத்தியவந்தன் உயிரைத் தவிர எந்தவரம் வேண்டுமானாலும் கேள்.

ஸா. என் மாமன் மாமிகளுக்குக் கண்கள் தெரியும்படிக் கருணை புரிந்தருள வேண்டும்.

இய. அவர்களுக்குக் கண்கள் தெரியும். நீயோ என்னுடன் நடந்து வந்ததால் அதிக களைப்புற்றிருக்கிறாய். திரும்பிப் போ.

ஸா. நான் என் பதியுடன் வந்திருந்தால் எனக்கு ஏன் களைப்பு தோன்றும்? பெரியோர்களாகிய தங்களுடன் வார்த்தையாடுவதும் நன்மையே பயக்குமென்று நம்புகிறேன். என் நாதனிடந்தான் இருப்பேன். ஆகையால் நான் இங்குதான் இருப்பேன்.



இய. நீ சிறியவளாயிருந்தாலும் அதிகமாய் கற்றிருக்கிறாய் போலும். உன் வார்த்தைகளோ இனிமையாயிருக்கின்றன. உன் பதியின் உயிரைத் தவிர வேறெந்த வரம் வேண்டும்? தருகிறேன்.

ஸா. என் மாமனார் த்யுமத்சேன மகாராஜா தான் இழந்துவிட்ட தன் இராஜ்ஜியத்தையடைய வேண்டும்.

இய. தந்தேன், நீ போகலாம்.

ஸா. சுவாமீ! தங்களைச் சரணமடைந்த எனக்கு இவை எல்லாமேன்? சத்துருக்களாயிருந்தாலும் சரணமடைந்தவர்களுக்குக் கருணைபுரிவது வழக்கமாயிற்றே.

இய. உன்னிடம் பேசப்பேச இனிமையே தருகிறது. நீ மிக புத்திசாலி! உன்பதியின் பிராணனைத் தவிர எவ்வித வரம் வேண்டுமோ கேள்.

ஸா. என் தந்தை அஸ்வபதி மகாராஜருக்கு என்னைத் தவிர புத்ர சந்தானமில்லை. அவருக்கு நூறு புத்திரர்கள் உண்டாக வேண்டும்.

இய. தந்தேன். இன்னும் என்னை ஏன் நிற்பந்திக்கிறாய். நீ போகலாம்.

ஸா. சுவாமீ! பதியையும், பக்ஷபாதமில்லாது நடத்தப்பட்ட தங்களையும் விட்டுப்போக மனம் வரவில்லையே.

இய. இப்படிப்பட்ட வார்த்தைகளை எவரிடத்திலும் நான் கேட்டதில்லை. உன் பதியின் உயிரைத்தவிர இன்னமும் எதாவது வரம் வேண்டுமானால் கேள், தருகிறேன்.

ஸா. எனக்கும் சத்தியவந்தருக்கும் புத்திரர்கள் உண்டாக வேண்டும்.

இய. உன் கோரிக்கைப்படி உனக்குஞ் சத்தியவந்தனுக்கும் புத்திரர்கள் உண்டாவார்கள். நீ இனிமேல் இங்கு நில்லாமற் போகலாம். (போகிறார்).

ஸா. (தனக்குள்) ஹா! ஹா! ஜகதீசா! ஜகத்காரணா! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! இதுவரையில் என்னுடன் சகஜமாக பேசிக்கொண்டிருந்தவர் இப்பொழுது திடீரென்று எங்கே

யோ போய்விட்டாரே. நான் அவரை மறுபடி எங்கு காண
ப்போகிறேன். இதுவரையில் நான் கேட்ட வரங்களையெல்
லாம் தந்தவர் இன்னும் இங்கு என்னுடன் பேசிக்கொண்
டிருந்தால் [illegible]ப் படவேண்டுமென்றோ! நானோ
எனக்கு முக்கியமான வரம் பெறவில்லையே! இதற்குள்
எங்கேயோ மறைந்தாரே. ஜகதீசா! நான் என் பெண்
ணாய்ப்பிறந்து இக்கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்ததே!
ஹா! இதுவும் உன் திருவிளையாட்டோ!

இய. (தனக்குள்) இது என்ன ஆச்சரியம். ஸாவித்ரி பின் தொடர்ந்து
வருவதற்குமுன் இக்கதவை மூடப் பார்த்தால் சாத்தியப்பட
வில்லையே! (தூதர்களைப் பார்த்து.) தூதர்காள்! ஸாவித்ரி பின்
தொடர்ந்து வரப்போகிறாள். இக்கதவை மூடுங்கள். சீக்கிரம்.
சீக்கிரம்.

தூ. சுவாமீ! ஒரு கொடியில் மூடக்கூடிய கதவை எங்களால்
மூடச் சாத்தியப் படவில்லையே! என்ன ஆச்சரியம்!

இய. ஓகோ! ஓகோ! தெரிந்தது. ஸாவித்ரி! நீயே கற்பரசி!
இது உன் மகிமையே போலும்.

ஸா. இயமதர்மராஜர் குரல் அதோ கேட்கிறதே. அக்கதவினரு
கிற் போய்ப் பார்ப்போம்.

இய. [திரும்பிப்பார்த்து] ஸாவித்ரீ! நீ கேட்ட வரங்களை எல்லாம்
தந்தேனே. ஏன் இங்கு வந்தாய்?

ஸா. சுவாமீ! நான் என் பதியை தெய்வமாகக் கொண்டிருக்க
அவரைவிட்டு எப்படி பிரிந்திருப்பேன்? அதுவுமல்லாமல்
எனக்குப் புத்திர சந்தானம் உண்டாகும்படிக்கும், தாங்கள்
வரந்தந்தருளினீரே, இது பொய்த்திடுமோ வென்று சந்தே
கங்கொண்டிருக்கிறேன். ஏனென்றால் எனக்குப் பதியில்
லாது புத்திர சந்தானமெப்படி யுண்டாகும்? எப்போதும்
தருமத்தைப் பாதுகாப்பவராதலால் உமக்கு தருமராஜர்
என்ற பட்டமுமிருக்கிறது. இங்ஙனமாயோசித்துக் கூடிய தாங்
கள் எனக்கு இன்னம் ஒருவரந் தரக்கூடாதா?

இய. அடா என்ன! ஸாவித்ரீ! உன் வார்த்தைகளுக்கு மெச்சு
கின்றேன். நீ எந்த வரம் கேட்டாலும் தருகின்றேன்.



ஸா. சுவாமீ! தவிர என்ற வார்த்தையை மறந்து விட்டீர்
போலும். எந்தவரங் கேட்டாலும் தருகின்றீர்களா? இது
சத்தியந்தானா?

இய. ஸாவித்ரீ! நீ எந்தவரங் கேட்டாலும் தருகின்றேன்.
அதற்கு தடையில்லை.

ஸா. என் பதியினுயிரைத்தந்து அவரை மறுபடியும் பிழைப்பிக்க
வேண்டும். சுவாமீ!

இய. அப்படியே செய்கிறேன். உன் பதியுடன் நீ அனேக காலம்
சுகமாய் வாழக்கடவாயாக.

ஸா. தர்மராஜா! நான்போய் வருகிறேன். சுவாமீ!

இய. ஸாவித்ரீ! நீ இயமபுரிக்கு வந்தும் என் பத்னி ஜயமாலாவை
காணாமல் போவது தகுதியல்ல. ஆகையால் அவளை
அழைப்பிக்கின்றேன். கண்டு போகலாம்.

ஸா. தர்மராஜா! தங்கள் வார்த்தையைத் தட்டிபோவேனோ?
தங்கள் பத்னியைக் காண என்கண்கள் செய்த பாக்கியமே
பாக்கியம். அழைப்பியும் சுவாமீ.

இய. தூதர்கள்! என் பத்னி ஜயமாலாவை உடனே இங்கு வர
நான் கட்டளை யிட்டதாகக் கூறி, அழைத்து வாருங்கள்.

தூ. சுவாமீ! உத்தரவு. (போகிறார்கள்)

ஜயமாலா பாடிக்கொண்டு வருகிறாள்.

ஜய. பிராணநாதா! ஏன் என்னை அழைப்பித்தீர்?

இய. வேறொன்றுக்குமில்லை. இதோ பார்த்தாயா! இவள் பூலோ
கத்தில் வசிக்கும் ஸாவித்ரீதேவி. இவள்பதி சத்தியவந்தன்.
அவனுக்கு ஆயுள்காலம் இன்றுடன் முடிவாயிற்று. ஆகை
யால் நம்முலகத்திற்குக் கொண்டுவர தூதர்களை அனுப்பி
னேன். அஞ்சா நெஞ்சுடையவர்கள் திரும்பிவந்து அக்
காரியம் அவர்களால் முடியவில்லை என்றார்கள். பிறகு
அக்காரியத்தை முடிக்கும் பொருட்டு பூலோகத்துக்கு
நானே போனேன். அங்கு சத்தியவந்தன் ஸாவித்ரியின்
மடியின்மீது தலைவைத்து படுத்திருந்தான். பூலோகத்தில்
யார் கண்ணுக்கும் புலப்படாத என்னை இந்த ஸ்திரீரத்ன
மாகிய ஸாவித்ரிதேவி பார்த்து வார்த்தை யாடினாள்.

நான் அச்சத்தியவந்தனுடைய உயிரைக் கவர்ந்துவர, என்னைப் பின் தொடர்ந்து, அக்னியாறு முதலிய கடும் பாதங்களையும் தாண்டி, நம் லோகத்திற்கு வந்திருக்கிறாள். இவளுடன் சம்பாஷித்ததில் இவள் புத்தி கூர்மைக்கும், இனிய தர்ம சாஸ்திர சம்பந்தமான வார்த்தைகளுக்கும் மெச்சி, சில வரங்களைக் கொடுத்திருக்கின்றேன். இவள் மாமன், மாமி, தாய், தந்தை முதலியோரிடம் வைத்த அன்பும், புருஷனிடம் வைத்த விச்வாசமும், கற்புநிலைமை முதலிய நற்குணங்களும் நிறைந்திருப்பதால், பதிவிரதா சிரோன்மணியாகிய லோபமுத்திரைக்கு ஒப்பிடலாமே யொழிய வேறில்லை. இவள் என்னிடமிருந்து நிகரற்ற அநேக வரங்களைப்பெற்றதன்றித் தன்பதி சத்தியவந்தன் உயிரையும் மீட்டு, அவனுடன் சுகமாகவாழவும் வரம்பெற்றிருக்கிறாள். இப்படிப்பட்ட ஸ்திரீரத்தினத்தைத் தரிசிப்பாயென்றும், அவளிடமிருந்து அறியத்தக்கவற்றை அறிந்துகொள்வாயென்றும் அழைப்பித்தேன்.

ஜய. பிராணநாதா! மிகவும் சந்தோஷம்.

இய. ஸாவித்ரி! இவள்தான் என் பத்னி. ஸ்திரீகள் புருஷரிடம் நடந்துகொள்ளவேண்டிய கற்பு முறைமைகளை இவளுக்குத் தெளிவாகக் கூறுவாய்.

ஸா. தர்மராஜா! தங்கள் தேவிக்கு நான் என்ன கூறப்போகிறேன்! அவர்களுக்குத் தெரியாத விஷயம் நானென்ன சொல்லப்போகிறேன். சுவாமி.

ஜய. ஸாவித்ரிதேவி! புருஷரிடம் ஸ்திரீகள் நடந்துகொள்ளும் முறைமைகளைத் தயைசெய்து தெரிவிப்பாயாக.

ஸா. அம்மணி! எனக்கு என்ன தெரியும்?

ஜய. ஸாவித்ரிதேவி ஸ்திரீகள் பதியினிடம் அனுசரிக்கும் விதிகளைக் கிரமமாகக் கிருபைசெய்துக் கூறவேண்டும் அம்மா.

ஸா. அம்மணி! ஸ்திரீகள் தாய் தந்தைகளிடம் இருக்கும்போது கல்வி, கேள்விகளில் சிறந்து, அவர்களுக்கடங்கி பயபக்தி விசுவாசத்துடன் நடக்கவேண்டும். விவாகமானபின், அதிகாலையில் எழுந்து, ஸ்நானஞ்செய்து, மஞ்சள் பூசி, நீரணிந்



து, குங்குமபொட்டு இட்டுகொள்வதும் தவிர கணவருக்கு பாதபூஜைசெய்யவேண்டும். அவர் உண்டபின் உண்ணுதலும், பின்தூங்கி முன் எழுதலும், அவர் மகிழும்படி ஆடையாபரணங்களை அலங்கரித்தலும், அவர் இல்லாக்கால் வெறுத்தலும், கோபம் கொண்டால் வெறுக்காமலும், எதிர்நின்று பேசாமலும், அயல்வீடு தனியே புகாமலும், திருவிழாவேடிக்கைபார்த்தல் புண்ணியதீர்த்த ஸ்நானம், கடவுளை வணங்குதல் முதலியவை அவர் உத்திரவின்றிச் செய்யாமலும், கணவர் தன் ஆபரணம் முதலியவற்றைப் பிறருக்குக் கொடுப்பினும் தடுக்காமலும், அவர்முன் உட்காராமலும். அவர் உண்ட எச்சிலை அமுதம்போல் உண்ணலும், ஏவலாளர், துறவிகள், சுற்றத்தவர், பசுக்கள், குலதெய்வம், விருந்தினர், பிதுர்கள் முதலியோருக்குப் பகிர்ந்துகொடுத்தல்லது புசியாமையும், கணவர் குறிப்பறிந்துச் செய்து முடித்தல், புறங்கூறாமை, இல்வாழ்க்கைக்கு வேண்டியவைகளைச் சேர்த்தலும், வீண் செலவு செய்யாமையும், அவர் ஆக்ஞை கடவாமையும், கணவர் அழகில்லாதவரானாலும், தீரா வியாதியஸ்தரானாலும், கிழவரானாலும், அவரை இகழாமலும், அவர் துன்பமெய்தியபோது தானும் துன்பப்படுதலும், மகிழ்வெய்தியபோது தானும் மகிழ்வெய்தலும், கணவர் எச்சமயத்திருப்பினும் அச்சமயத்தையே தானும் அனுசரித்தலும், பூப்பு நாள் மூன்றிலும் முகம் காட்டாமலும், பேசாதிருத்தலும், கணவரது தாய் தந்தையரை அவமதிக்காது வணங்கிப் போற்றலும், தமது தாய் தந்தையர், ஆசாரியர், குழந்தைகள், முதலிய எல்லோருக்கும் ஆசை மிகுந்து பெருமகிழ்ச்சிக் காட்டலும், உரல், அம்மி, உலக்கை, வாசற்படி, முறம், முதலியவற்றில் உட்காராமையும், முதலிய நற்குண நற்செய்கையுடையவளே பதிவிரதை யென்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். அவை அபாரமான விஷயங்களாக இருக்க எனக்குத் தெரிந்தவரையில் பிதற்றினேன். அம்மணீ!

ஸாவித்ரிதேவி! நீயா பிதற்றினாய்! நீ சிறியவளாயிருந்தாலும், உன் புத்தியோ மிகப்பெரிதாயிருக்கிறது. எவ்வுலகத்திலும் உன்னைப்போன்ற பெண்கள் அகப்படுவது கடினம்,

உன்னுள் இனிய திருநாக்கி யாயினேன். இன்றுமுதல் நீ சொல்லியபடியெல்லாம் நடந்துகொள்ளுவேன்.

ஜயமாலை! நான் ஸாவித்ரியைக் கொண்டுபோய் பூலோகத்தில் சத்தியவந்தனிடம் விட்டுவருகிறேன். நீ அந்தப்புரத்திற்குப் போவாய்.

பிராணநாதா! அப்படியே செய்யும். [போகிறாள்]

[திடிவந்து] ஸ்வாமி! நாரதர் வந்திருக்கின்றார். உள்ளே விடட்டுமா?

நல்லது! வரச்சொல். [போகிறான்.]

நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.

நாரதரே! ஏது இப்படி வந்தது?

தங்களைப்பார்த்துப் போகலாமென்று. அது யார்? ஸாவித்ரியா?

ஆம்.

முனிபுங்கவா! நமஸ்கரிக்கிறேன்.

மங்களமளியவந்து! தீர்க்கசுமங்லிபவ!

நாரதரே! ஸாவித்ரி தெரியுமோ?

முன்னமே ஸாவித்ரியைப்பற்றி தங்களிடம் சில விஷயங்கள் கூறியிருந்தேனே.

ஆம், ஆம். ஞாபகம் வந்தது. எனக்கு அவசரமான காரியமிருப்பதால் தங்களுடன் வார்த்தையாட இப்போது சமயப்படாது...

ஸாவித்ரியின் விஷயமோ?

ஆம்.

அது என்ன?

என்னுடன் மன்றாடி தன் பதி சத்தியவந்தனுடைய உயிரை மீட்டுக்கொண்டுபோகிறாள். நான் அவளுடன் பூலோகத்திற்குப்போய் அச்சத்தியவந்தனிடம் ஸாவித்ரியை ஒப்புவித்து வரவேண்டும்.

நானும் பூலோகத்திற்குத்தான் போகிறேன். உங்களுடன் வரலாமா?

தடையின்றி. [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிந்தது.

# அங்கம்-III.

## காட்சி 6.

இடம்: சாலவபுரிக்கடுத்த காடு.

சத்தியவந்தன் சவமாகப்படுத்திருக்கிறான்.

அஸ்வபதியும் மாலவியும் ஒரு பக்கமாக வருகிறார்கள்.

த்யுமத்சேனனும், பத்மாட்சியும் கண்கள் தெரியப்பெற்று சுமாலியுடன் மற்றொரு பக்கமாக வருகிறார்கள்.

அ. மாலவி! அதோ! நாம் தேடிவந்தவர்கள் எதிரில் வருகிறார்கள்.

த்யு. அஸ்வபதிமகாராஜா! நமஸ்காரம்.

ப. மாலவிதேவி! வாரும் அம்மணி.

அ. த்யுமத்சேனமகாராஜா! உங்களுக்கிப்பொழுது கண்களின்பாதை ஒழிந்ததுபோலும்?

சு. அவர்களுக்கு அச்சங்கடங்கள் இன்றுதான் ஒழிந்தன.

த்யு. தாங்கள் ஏது இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டு எங்களைப் பார்க்க வந்தது?

அ. எனக்கு என்ன சிரமம்! தங்களையும், நமது வநாவரர்களையும் பார்த்து, அதிக நாளாயிற்றென்று பார்த்துப் போகலாமென்று வந்தோம்.

த்யு. மிகச் சந்தோஷம்.

அ. எங்கே நமது சத்தியவந்தனும், ஸாவித்ரியும்?

த்யு. அவர்கள் இக்காட்டை சுற்றிப் பார்க்கப்போனவர்கள் இன்னும் வராததால் நாங்கள் அவர்களைத்தேடிச் செல்கிறோம்.

எல்லோரும் சத்தியவந்தனுடைய சவத்தருகில் வருகிறார்கள்.

சு. என்ன! சத்தியவந்தன் படுத்திருக்கிறான்?

த்யு. ஐயா! சத்தியவந்தா! ஏன் படுத்திருக்கிறாய்! என்ன!

அ. ஐயோ! ஸாவித்ரீ! நீ எங்கிருக்கிறாய்?

சு. (சத்தியவந்தனை அருகில்போய்ப் பார்த்து.) சத்தியவந்த ரிறந்து கிடக்கிறானே. ஐயையோ! ஐயையோ!

து. இறந்து கிடக்கிறான்? ஐயையோ! ஐயையோ! குமாரா! நான் எப்படி சகிப்பேன்! உன்னைக்கொண்டுபோன இயமன் என்னைக் கொண்டுபோகலாகாதா!

ப. ஸாவித்ரீ! ஸாவித்ரீ! உன் புருஷனிறந்தானென்று நீயும் பிராணத்யாகம் செய்துகொண்டாயோ?

அ. மாலவி! பார்த்தையா! நாம் வரும்போது நமக்கு அனேக துற்சகுனங்களாயினவே. இங்கு நடந்திருப்பதைப் பார்த்தையா? நம் ஸாவித்ரிக்கு நாம் அப்பொழுதே கூறியும் நம் வார்த்தையைக் கேளாமல் இச்சத்தியவந்தனையே மணந்தாளே. என்ன கதியாயினளோ?

சு. மகாராஜா! ஸாவித்ரீதேவி அதோ கருப்பு நிறமுடைய யாரோ ஒரு பெரிய புருஷருடனும், நாரதமகாமுனிவருடனும் வருகிறாள். அக்கருத்த புருஷரைப் பார்த்தால் எனக்கு அதிக பயமாயிருக்கிறது. ஸாவித்ரீ! ஸாவித்ரீ!

ஸாவித்ரீ, யமதர்மராஜர் நாரதர் வருகிறார்கள்.

இய. ஸாவித்ரீ! நீயும்பதி பக்கத்திருக்குமிடத்திற்குப்போ.

[போகிறான்.]

[இயமன் சத்தியவந்தன் உயிரின் கட்டை அவிழ்த்து விடுகிறான்.]

சத். ஸாவித்ரீ! ஸாவித்ரீ! வெகுநேரம் தூங்கிவிட்டேன். என் என்னை எழுப்பவில்லை. யாரோ ஒரு கருத்த புருஷன் என்னைக் கட்டி யிழுத்துப்போகையில் ஒரு சுந்திரமாது அவரை எங்கு போகவும் விடாது பின் தொடர்ந்து, இனிய வார்த்தைகளால் அவரைச் சந்தோஷிப்பித்து, திருப்தி செய்து என்னை மறைத்து வந்ததாகக் கனாக் கண்டேன்.

ஸா. பிராணநாதா! தாங்கள் நித்திரையிலிருக்கும்போது நான் எப்படி யெழுப்புவேன்? தங்கள் தேகாரோக்கியம் சுகமாயிருக்கிறதா? எழுந்திருக்க முடியுமானால் எழுந்திருங்கள். தாங்கள் கண்டது கனவல்ல. உண்மையாக நடந்ததையே!



சத். கண்மணீ! என்னைக்கட்டின புருஷன் எங்கே?

ஸா. பிராணநாதா! அதோ! அதோ நிற்கப்பட்டவர்தான் தங்களுயிரைக் கவர்ந்துபோன தென்திசையாளும் இயமதர்மராஜர். அவர் கிருபா கடாக்ஷத்தினால்தான் தங்களை மறுபடியும் அடையப்பேற்றேன். ஆகையால் முன்பு அவர் பொற்பாத கமலங்களில் நமஸ்கரியுங்கள்.

சத். தர்மாராஜா! நமஸ்காரம்.

இய. சத்தியவந்தா! உன் மனைவி பதிவிரதா சிரோன்மணியானதால் உன்னை மறுபடியும் அடையப்பெற்றாள். அவளுடைய கற்புக்கு நான் மெச்சுகிறேன். நீயும், உன் மனைவியும் எப்பிறப்பிலும் பிரியாது வாழ்க்கடவீர்.

நா. கல்யாண்! கல்யாண்!

ஸா. (தாய்தந்தையரையும், மாமன் மாமிமாரையும், சுமாலியையும் பார்த்து) நீங்கள் எல்லோருங்கூட இயமதர்மராஜரை தரிசித்து அவர் பாதாரவிந்தங்களில் நமஸ்கரியுங்கள்.

அ. தர்மராஜா! நமஸ்காரம். தங்களை இன்றுகாண என்ன தவஞ் செய்தோமோ.

மா. சுவாமீ! நமஸ்கரிக்கின்றேன்.

இய. தம்பதிகளாக, சுகமாக வாழ்க. ஸாவித்ரியைப்பெற்ற நீங்களே புண்ணியவான்கள். ஸாவித்ரி தங்களுக்காக பெற்ற வரம்போல் நீங்கள் புத்திரர்களைப் பெறுவீர்.

நா. கல்யாண்! கல்யாண்!

து. தர்மராஜா! நமஸ்காரம்.

ப. சுவாமி! நமஸ்கரிக்கின்றேன்.

இய. தம்பதிகளாக வாழக்கடவீர். நான் ஸாவித்ரி இஷ்டப்படி கொடுத்தவரத்திற்கிணங்க நீங்கள் கண்களைப் பெற்றது மன்றி இழந்துவிட்ட நாடுநகரங்களை சீக்கிரத்திலேயே அடைவீர்கள்.

நா. கல்யாண்! கல்யாண்!

சு. ஐயா! நமஸ்காரம். தங்களருகே வர எனக்குப் பயமாயிருக்கிறது.

இய. ஏன்?

சு. என்னையும் தங்களுலகத்துக்கு இழுத்துச் செல்வீரோ வென்றுதான்.

இய. இல்லை, யில்லை, அப்படி செய்யேன்.

சு. தென்திசைக்கோனே! அபயம்! அபயம்!

இய. நீ யாரடா?

சு. நான் த்யுமத்சேன மகாராஜர் அரண்மனை விதூஷகன்.

இய. நீ ஏது இவர்களுடன் இக்காட்டிலிருப்பது?

சு. சுவாமீ! தாய்தந்தையரினும் அதிகப்பிரியமுடன் ஆதரித்து வருபவர்கள் காட்டில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க, நான் மட்டும் நாட்டிலிருந்து வசிப்பது தர்மமல்லவென்று இவர்களுடனிருக்கின்றேன்.

இய. நீ மகா புத்திசாலியாய்க் காணப்படுகிறாய்.

சு. சுவாமீ! எல்லாம் தங்கள் ஆசீர்வாதமும், அனுக்ரகமுமே. எனக்கு ஒருவரம் வேண்டும்.

இய. என்ன?

சு. தங்கள் உலகத்திற்கு என்னை எப்பொழுதும் அழைத்து போவதில்லையென்று.

இய. அதெப்படி முடியும்? நீ பிறந்தும் பிரம்மா உனக்கு ஆயுளை நியமித்திருக்கிறார். அதன்படி உன் ஆயுசுமுடிவில் என் உலகத்துக்கு வந்துதான் தீரவேண்டும். நான் நீதி தவறாமல் நடக்கவேண்டுமே. ஆகையால் நீ கேட்கப்பட்ட வரத்தை யெப்படி தருவேன். வேறொன்று வரமாவது கேள், கொடுக்கின்றேன்.

சு. சுவாமீ! தங்களால் முடியாததும் உண்டோ? நான் கேட்கும் வரத்தையே அருள் புரியவேண்டும். இளவரசரைக் காப்பாற்றினதுபோல் என்னையுங் காப்பாற்றவேண்டும்.

இய. சத்தியவந்தன் பத்னி ஸாவித்ரிதேவியின் கற்பு விசேஷத்தால் அவனை மீட்டுக் காப்பாற்றினேனே தவிர என்னால் என்ன முடிந்தது.

சு. கற்பு விசேஷம் தங்கள் பராக்கிரமத்திலும் பெரிதோ?

இய. ஸாவித்ரிதேவி தன் கற்பின் மகிமையாலும், புருஷனிடம் வைத்திருந்த அன்பின் விசேஷத்தினாலுமன்றோ தன் பதியின் ஆயுள் முடிவில் நான் கவர்ந்துபோன அவன்



உயிரை, நான் எங்குபோனாலும் என்னை விடாது பின்துடர்ந்து, தன்பதியின் உயிரை மீட்டுக்கொண்டதுமன்றி, சில வரங்களும் பெற்று வந்தாள்.

சு. ஹா! ஹா! அப்படியா! ஆனால் என் மனைவியையும் ஸாவித்ரியைப்போல் நடந்துகொள்ளச் சொல்லட்டுமோ?

இய. என்ன விளையாடுகிறாய்?

து. குமாரி! இயமதர்மராஜரிடத்துங் கூடவா விளையாட்டு. அவர் சபச்சி விட்டபோகிறார்.

சு. தர்மராஜா! கோபித்துக்கொள்ளாதீர்.

து. கேட்டீர்களா! ஸாவித்ரியின் மகிமை! இவளே உத்தமி. இவளால் அல்லவோ நம் சத்தியவந்தனைப்பார்க்கக் கொடுத்துவைத்தோம். ஸாவித்ரீ! ஸாவித்ரீ! உன் கற்பின் விசேஷமே விசேஷம். ஹா! ஹா! என்ன ஆச்சரியம்! உன் பதிக்கும், உற்றார்பெற்றோருக்கும் நன்மையுண்டாக நடந்துகொண்டாய். உன்னைப்பெற்ற அஸ்வபதி மகாராஜாவும் மாலவிதேவியுமே பாக்கியவந்தர். ஸாவித்ரீ! நாங்கள்செய்த புண்ணியமோ என் புத்திரனுக்கு நீ பத்னியாகவந்தது?

(த்யுமத்சேனமகாராஜன் மந்திரிமுதலானோர் வாத்தியகோஷங்களுடன் பட்டத்தை யெடுத்து வருகிறார்கள்.)

மந்திரி. மகாராஜா! நம் காட்டை யபகரித்த அக்கடும்பாதகன் கடகேது இறந்துவிட்டான். ஆகையால் தாங்கள் இம்முடிதரித்து அந்நாட்டை யாளவரலாம்.

து. எனக்குத் தள்ளாமையாய் விட்டபடியால் நான் ராச்சியபாரம் செய்வது கஷ்டம். ஆகையால் சத்தியவந்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்து, ராஜ்யபாரங்கொடுக்கலாம்.

மந்திரி. தங்களிஷ்டப்படி செய்விக்கலாம்.

து. அஸ்வபதீ! தங்களுக்கேதேனுந் தடையுண்டோ?

அ. த்யுமத்சேனரே! எனக்கு ஒரு தடையுமில்லை. உம்மிஷ்டம் போற் செய்யலாம்.

எல்லோரும். ஜெயவிஜயீபவ!

து. தர்மராஜா! என் புத்திரனுக்கு தங்கள் ஹஸ்தத்தினாலேயே மகுடாபிஷேக முடிசூட்டி செய்து ஆசீர்வதிக்க வேண்டும்.

[இயமதர்மராஜர் முடிசூட்டி ஆசீர்வதித்து மறைந்துவிடுகிறார்.]

அ. முனிபுங்கவா! முன்பு நீர் எங்களிடம் சத்தியவந்தன் ஒரு வருஷத்தில் இறந்து விடுவானென்றும் ஸாவித்திரியின் பிரியம் போல் அவனுக்கே விவாகம் செய்துக் கொடுக்கும்படிக் கூறிப்போன உண்மை யிப்போதுதான் எங்களுக்குத் தெரிந்தது. அதுமுதல் இதுவரையில் நடந்த விருத்தாந்தங்களை எங்களுக்குக் கூறும்.

நா. அசுபதி மகாராஜா! நான் தங்களைப் பார்த்துப்போன வுடன் இயமலோகத்துக்குப்போய் இயமதர்மராஜனிடம் ஸாவித்திரியைப்பற்றி முறையிட்டேன் அதற்குத்தக்க பதில் கூறாமையால் பிரமலோகத்துக்குப்போய் பிரமனிடம் முறையிட்டேன். அவர் கருணாதேவியை ஏவி இயமதர்மருக்கு ஸாவித்திரி விஷயத்தில் கருணை வரும்படி செய்தபடியால்தான் எவ்விஷயத்திலும், பார்வதியாலும், அதிசாதுவரும் நீதிதவறாதவருமான இயமதர்மராஜா கற்புக்கரசியாகிய ஸாவித்திரியின் [illegible] வார்த்தைகளுக்கு மயங்கி இவள் கேட்ட வரங்களையெல்லாம் [illegible], அவன் பதியையும் பிழைப்பித்து [illegible] ரோகவந்த சத்தியவந்தனிடம் ஸாவித்திரியை ஒப்புவித்துப் போகவந்தவர்க்கு மகுடமும் சூட்டிவித்து மறைந்தனர்.

து. முனிபுங்கவா! என்ன ஆச்சரியம்! கேட்கக் கேட்க அற்புதமாயிருக்கிறது.

மந். மகாராஜா! நாம் எல்லோரும் நம் நாட்டிற்குப் போகலாமே. [illegible]

(மங்களவாத்தியங்கள் முழங்குகின்றன.)

மங்களம். மங்களம்.

காட்சி முடிந்தது.

நாடகம் முற்றிற்று.

S. MURTHY & CO., MADRAS.—1912.